Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆடி 3 ஆம் நாள் ஸபர் 4 (18-7-61) செவ்வாய்க்கிழமை இதழ் 132

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்.
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

கடாங்காவுக்கு ஐ. நா.

# 36 மணிநேர எச்சரிக்கை

## வடபகுதியிலிருந்து வெளியேற வேண்டும்

### கடாங்கா நிராகரித்தது

லண்டன், ஜூலை 17

கடாங்காவுக்கும் ஐக்கியநாட்டு இராணுவத் தலைமைப் பீடத்துக்கும் புதிய நெருக்கடி முற்றிவருகிறது.

வடக்குகடாங்காவின் சில பகுதிகளை நடுநிலைமைப் பிரதேசமாக்க வேண்டுமென்றும் அங்கிருந்து கடாங்கா தன் துருப்புக்களை 36 மணி நேரத்துக்குள் அகற்றவேண்டுமென்றும் ஐ. நா. இராணுவ காரியாலயம் கேட்டுள்ளது.

இந்த இறுதி எச்சரிக்கை ஒரு பயமுறுத்தல் என்றும் ஆத்திரமூட்டுவதாகுமென்றும் கூறி, அதை நிராகரிப்பதாக, கடாங்காவின் சார்பாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## நேபாளத்தில் பஞ்சாயத்து ஆட்சி

### மந்திரி விளக்குகிறார்

காட்மாண்டு, ஜூலை 17

நேபாளத்தில் மன்னர் மகேந்திரா ஏற்படுத்த இருக்கும் பஞ்சாயத்து ஆட்சியைப் பற்றி மந்திரி தயா ரேடியோ மூலம் கூறியதாவது:

உலகம் இன்று நேர்முரணை இரு வல்லரசு கோஷ்டிகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இச்சமயம் பார்லிமெண்ட் ஜனநாயகம் என்ற பெயரால் நேபாளத்தைப் போன்ற ஒரு சிறிய நாட்டில் பலமற்றஅரசியலமைப்பு இருப்பது சரியன்று. நேபாளத்தில் பார்லிமெண்ட் ஜனநாயகம் தோல்வியடைந்து விட்டது ஏனெனில் பொருளாதார புரட்சி ஏற்படுமுன் அரசியல் புரட்சி ஏற்பட்டுள்ளது.

ஏழ்மையான அபிவிருத்தியற்ற நாடுகளில் பார்லிமெண்ட் ஜனநாயக முறைக்கு கம்யூனிஸத்தால் ஆபத்து ஏற்பட்டுள்ளது. நேபாளத்தில் மக்கள் எல்லாரும் பங்குபற்றக்கூடிய பஞ்சாயத்து ஜனநாயகமே வளர்ச்சி பெற வேண்டும். கிராமம் அல்லது நகர பஞ்சாயத்தை 21 வயதுக்கு மேற்பட்டவர் ஒவ்வொருவரும் தெரிவு செய்வர். கிராமப் பஞ்சாயத்துக்கள் ஜில்லா பஞ்சாயத்து மெம்பர்களைத் தெரிவு செய்வர். ஜில்லா பஞ்சாயத்துக்கும், பிரதேச பஞ்சாயத்துக்கும், பிரதேச பஞ்சாயத்துக்கள், மன்னரைத் தலைவராகக் கொண்டு தேசிய பஞ்சாயத்துக்கும் மெம்பர்களைத் தெரிவு செய்வர்.

தேசிய பஞ்சாயத்தில் சில நியமன மெம்பர்களுமிருப்பர். அந்தப் பஞ்சாயத்து மன்னருக்கும் நிர்வாகத் துக்கும் ஆலோசனை கூறுவதாக இருக்கும். இரு வருடங்களுக்கு ஒரு முறை இப்பஞ்சாயத்துக்களின் மூன்றிலொரு பகுதி மெம்பர்கள் புதுத் தேர்தல் மூலம் புதிதாகத் தெரிவு செய்யப்படுவர்.

---

'மக்பூல் பக்ஷி' என்ற பாகிஸ்தான் கப்பல், கல்கத்தாவிலிருந்து டண்டிக்குச் செல்லும் வழியில், தீப்பிடித்துக் கொண்டது.

## திரு. ஆழ்வாப்பிள்ளை ஓய்வு பெறுகிறார்

கொழும்பு, திங்கள்

உணவு, வர்த்தக, போக்குவரத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை தாம் அரசாங்கசேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான பத்திரங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார். ஓய்வு பெறுவதற்கு முன்னர் அடுத்த மாத இறுதியிலிருந்து அவர் லீவில் செல்வார்.

திரு. ஆழ்வாப்பிள்ளை 1929 ம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை சிவில் சேர்விஸில் சேர்ந்தார். நாட்டின் உணவு விநியோகம் சம்பந்தமாக 20 வருடங்களாக நற்பணியாற்றினார். அரசாங்க நிர்வாகத்துறையில் பல பதவிகளை அவர் வகித்துள்ளார்.

---

## சமய குருமார்களுக்கும் விஸா வரி

கொழும்பு, திங்கள்

இலங்கையிலுள்ள எல்லா சமய சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டுள்ள தற்காலிக வாசிகளான இலங்கையரல்லாதவர் ஒவ்வொருவரும் 400 ரூபாய் வரி கட்டும்படி குடியேற்ற வெளியேற்றக் கட்டுப்பாட்டு அதிகாரி அறிவித்திருக்கிறார். அறிவிப்புக் கிடைத்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் வரி செலுத்தும்படி இவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரிவினை பல்கலைக் கழக வித்தியாபதியின் முகாமைக்குக் கீழ் உள்ள பள்ளிகூடங்களில் கடமை ஆற்றுவோர்களும் அரசாங்க ஸ்தாபனங்களில் வேலை பார்ப்பவர்களும் விசா வரி செலுத்தும் படி அரசாங்கத்தால் கேட்கப்படவில்லை.

## இன்று பார்லிமெண்ட் கூடுகிறது

### சிம்மாசனப் பிரசங்க விவாதம்

கொழும்பு, திங்கள்

செனட்சபையும் ஜனப்பிரதிநிதிகள் சபையும் நாளை பி. ப. 2-30 க்கு கூடும். ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றியுரை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெற்று ஜூலைமாதம் 20ம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படும்.

செனட்சபையில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை செனட்டர் அலிஸ் பிரேரிக்க, ரத்கம எம். பி. ஏ. டி. ஜயசூரியா ஆமோதித்தார். ஜனப் பிரதிநிதிகள் சபையில் குருநாகல் எம். பி. திரு. ஜயப்பத்திரான பிரேரிக்க எட்வின் இலங்கரத்தின எம். பி. ஆமோதித்தார்.

---

## இரு சகோதரர்கள் கிணற்றில் மாண்டனர்

பரந்தன், திங்கள்

இரத்தினம் கருணாகரன் (12 வயது) அருணாசலம் (10 வயது) ஆகிய இரு சகோதரர்கள், அவர்கள் தங்கள் வளவில் உள்ள கிணற்றில் மூழ்கி மாண்டனர்.

## கல்லூரி அதிபர்கள் ஓய்வுபெற யோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இவ்வருட முடிவுக்குள் பிரபல கல்லூரிகள் சிலவற்றின் அதிபர்களும் ஆசிரியர்களும் ஓய்வு பெற விருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் தங்கள் ஓய்வுக்கான பத்திரங்களை விரைவில் அனுப்பவிருக்கிறார்களாம்.

இவர்களிற் பலர் தங்கள் ஓய்வின்பின் கைத்தொழில் விருத்தியிற் சிரத்தை எடுப்பார்களெனத் தெரிகிறது.

---

## மேஜர் ககாரின் போலந்து விஜயம்

மாஸ்கோ, ஜூலை 17

வெளிநாடுகளிலிருந்துபெரும் தொகையாக அழைப்புகள் சோவியத் வானவெளி வீரர் மேஜர் ககாரினுக்கு வந்திருப்பதாகவும் அவர் ஜூலை மாதம் 20 ந் திகதி போலந்துக்குச் செல்வார் என்றும் அதைத் தொடர்ந்து கியூபா செல்ல எண்ணியுள்ளார் என்றும் மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காங்கோவுக்கு ரஷ்ய தூதுகோஷ்டி

### ஸ்டான்லிவில்லி அரசாங்க அங்கீகாரம்

லண்டன், ஜூலை 17

ஸ்டான்லிவில்லியில் சோவியத் காரியாலய வேலை சம்பந்தமாகக் கவனிப்பதற்காக 8 பேர் கொண்ட சோவியத் தூதுகோஷ்டி ஒன்று ஸ்டான்லிவில்லிக்குச் சென்றுள்ளது.

காங்கோவில் லுமும்பாவின் ஆதரவாளரான கிஸங்காவின் அரசாங்கமே சட்டபூர்வமான அரசாங்கம் என சோவியத் யூனியன் அங்கீகரித்துள்ளது.

---

## கரூரில் தீ விபத்து

### குடிசைகளும் தறிகளும் நாசம்

கரூர், ஜூலை 14

செங்குந்தபுரத்திலும், காமாட்சி அம்மன் கோவில் தெருவிலும் ஏற்பட்ட பெரும் தீவிபத்தில் 80 குடிசைகளும் 250 கைத் தறிகளும் நாசமாயின. மொத்தம் ஒரு லட்சம் ரூபாய் பொருட்சேதமென மதிப்பிடப்படுகிறது தீயணைக்கும் படையினர் தீயை அணைத்தனர்.

## வீடு பெறும் அதிர்ஷ்டசாலிகள்

கொழும்பு, திங்கள்

ரூபாய் இரண்டாயிரத்திற்கான அரசாங்க வீடமைப்புக் கடன் உதவி வழங்கும் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு இன்று கொழும்பு பார்ஸன்ஸ் வீதியிலுள்ள அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது. ஆறு தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் 75 பேர்களுக்கு சீட்டு விழுந்தது. 2001 ரூபாய்க்கும் அதிகமாக கடன் எடுப்போருக்கான அதிர்ஷ்டச்சீட்டு வியாழக்கிழமை இழுக்கப்படும். இதற்கென அரசாங்கம் 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றது.

## கிராமாபிவிருத்தி சபைகளுடன் கிராமச் சங்கங்கள் இணைப்பு?

### ஐ. நா. தூதுகோஷ்டி வருகிறது

கொழும்பு, திங்கள்

இலங்கையில் கிராமாபிவிருத்திச் சங்கங்களின் நிலைமைபற்றி ஆராய ஐ. நா. விலிருந்து தூதுகோஷ்டியொன்று இலங்கைக்கு விஜயம் செய்கின்றது. இந்தத் தூதுகோஷ்டி இதுபற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கையை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கும்.

கிராம அபிவிருத்தி சபைகளை கிராமச் சங்கங்களுடன் இணைப்பதுபற்றி ஆலோசனை நடைபெற்று வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருக்கும் 7387 கிராமச் சங்கங்களை ஒன்றாக இணைத்து ஒரு மத்திய உறுப்பின் கீழ் கொண்டுவர அரசாங்கம் ஆலோசனை செய்து வருகிறது.

## பண்டிதர் சங்கம் தொழிற் சங்கமாகும்

உடுப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைத் தமிழ்ப் பண்டித பட்டதாரிகள் சங்கத்தை ஒரு தொழிற் சங்கமாக்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொழிற்சங்கமாகப் பதிவு செய்வதற்குப் போதியதொகை அங்கத்தவர் தேவையாதலின் பழைய அங்கத்தனர் பழைய சந்தாப்பணத்தைக் கட்டுவதுடன் சேராத புதிய பண்டித, வித்துவான்களைச் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாம்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.



### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணனந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.



### தேவை

சகல விதமான பலகார வகைகள் சாப்பாடு முதலியன தயார் செய்யத் தெரிந்த கடை அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். — **ஈஸ்வரன் கபே, 143,** கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### தென்-யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு - கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் ஓர் களஞ்சியம் கட்டுவதற்காய கேள்விப்பத்திரம்

அரசினரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்தும், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தும், கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் எமது மாதிரிப் படத்தின்படியும், விவரணத்தின்படியும் களஞ்சியம் கட்டிமுடிக்கக் கேள்விப் பத்திரங்கள் தென் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் கோரப்படுகின்றன. மாதிரிப் படமும் விவரணமும் எமது காரியாலயத்தில் பார்வையிடலாம்.

2. ரூபாய் (100) ஒரு நூறு கட்டுப் பணமாகக் கட்டி எம்மிடம் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் பத்திரங்களிலேயே இக்கேள்விப்பத்திரங்கள் நிரப்பப்படவேண்டும். இக்கட்டுப் பணம் ரூபாய் நூறும் எம்மால் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் நாம் ஒப்பந்தஞ் செய்துகொண்டபின் திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் 29 - 7 - 61 சனிக்கிழமை காலை 10 மணிவரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்வி விண்ணப்பப் பத்திரங்கள் 26-7-61 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

4. சகல கேள்விப்பத்திரங்களும் 2-8-61 புதன்கிழமை காலை 10 மணிக்கு எமது வேலை ஒப்பந்தக் குழுவினல் ஆராயப்படும். விரும்பின் கேள்விப் பத்திரக்காரர் இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்கலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர், அவரது கேள்விப் பத்திரம் எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்டது என எம்மால் அனுப்பப்பட்ட அறிவித்தல் கிடைத்த ஒரு வாரகாலத்திற்குள் எம்முடன் ஒப்பந்தஞ் செய்ய ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். ஒப்பந்தப் பத்திரம் எமது காரியாலயத்தில் வழமையான வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

6. வேலைகள் முடிக்கப்பட்டு, 1961-ம் ஆண்டு மார்கழி மாதம் 1-ந் தேதிக்கு முன் கட்டிடம் எமக்குப் பாரந்தரல் வேண்டும்.

வி. இராசரத்தினம்
காரியதரிசி

தென்-யாழ். சமாசம்,
கிளிநொச்சி, 12-7-61.

### சங்கானை பட்டினசபை கேள்விப்பத்திர விளம்பரம்

சேரி ஒழிப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு இரணை வீடுகள் கட்டுதற்கான கேள்விப் பத்திரம் எம்மால் 29-7-61 நண்பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 26-7-61 நண்பகல் 12 மணி வரை 20,000 ரூபாவிற்குக் குறையாமல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் இக் கந்தோரில் ரூபாய் 50 கட்டிக் கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப்பத்திரச் செலவாக ரூபாய் 5-00 கட்டவேண்டும். மேற்படி பணம் ரூபாய் 5-00 திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. மற்றும் விபரங்கள் சங்கானைப் பட்டினசபைக் காரியாலயத்தில் கந்தோர் வேலை நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

நா. முத்தையா
தலைவர்
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபைக் காரியாலயம்,
சங்கானை, 14-7-61.


### விற்பனைக்கு

1ஸ்ரீ 5000 தொடர்பிலக்கத்திலுள்ள "லம்பிரெட்டா" (Lambretta) ஸ்கூற்றரும், 1ஸ்ரீ 9000 தொடர்பிலக்கத்திலுள்ள N. S. U. ஸ்கூற்றரும் நல்ல நிலைமையிலுள்ளது. 9/1, Old Park Road, Jaffna.



### விற்பனைக்கு

EY 8000 தொடர்பிலக்கமுள்ள "மொறிஸ் மைனர்" (Morris Mino[illegible] ல்ல டயர், பட்டரி [illegible] 3, கண்டி ரோட், அரியாலை, யாழ்ப்பாணம்.


காங்கேசன்துறை

### அமெரிக்கன்மிஷன் பாடசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், திங்கள்

"இன்றைய உடற்பயிற்சிப் போட்டி ஓர் உயர்ந்த தரத்தில் நடத்தப்பட்டதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உடற்பயிற்சியின் முக்கியத்தை இன்று இப்போட்டியில் பங்குபற்றிய மாணவ வீரர்களும், வீராங்கனைகளும் எடுத்துக் காட்டியுள்ளனர்" என்று காங்கேசன் துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டவண எஸ். கே. பங்கர் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. கே ஆர். சுப்பிரமணியம் பேசுகையில் மாணவர்களின் உடல் வலிமைக்கு இத்தகைய விளையாட்டுகள் மிக, மிக அவசிய என்றார்.

போட்டியில் சாம்பியன் 'கப்' பெற்றவர்களின் விபரம் வருமாறு:-

**மேற்பிரிவு** கே. வல்லிபுரநாதன் கே. சோதி.

**மத்தியபிரிவு** எம். முருகையா, ஆர். இராசமலர்.

**கீழ்பிரிவு** டி. வேலுச்சாமி, எஸ். தேவகன்னிகா, வி. சந்திராதேவி.

செல்லையா இல்லம் 226 புள்ளிகளும், பிக்கினல் இல்லம் 211 புள்ளிகளும், கேன்ஸ்மின் இல்லம் 138 புள்ளிகளும் பெற்றன.

# மா-ஸே-துங் — சூ கருத்து வேற்றுமை

லண்டன், ஜூலை 16

ரஷ்யா சீன உறவு பற்றி சீனத் தலைவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருக்கிறதென்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஹொங்கொங் நிருபர் கூறுகிறார்

சீனப் பிரதமர் சூஎன்லாயும் அவருடைய சகாக்களும் ரஷ்யா சம்பந்தமாக மா-ஸே-துங் பின்பற்றிவரும் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகத் தெரிகிறது. மா-ஸே-துங்கின் தீவிர இடதுசாரிக் கொள்கை காரணமாகவே ரஷ்யாவுக்கும் சீனவுக்குமிடையே மனக் கசப்பு ஏற்பட்டுள்ளது. முதலில் கம்யூன்கள் சம்பந்தமாக மாஸேதுங்குடன் மோதல் ஏற்பட்டது. பிறகு கட்சியின் மத்திய கமிட்டியின் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் மா-ஸே-துங்கிற்கு ஏற்பட்டது. அந்த மோதலில் சூஎன்லாயும் அவருடைய சகாக்களும் வெற்றி பெற்றனர். அவர்கள் ராணுவத்தின் ஆதரவுடன் இந்த வெற்றியைப் பெற்றார்.

சோவியத் பிரதமர் குருஷ்சேவுக்கு மாசேதுங் சவால் விடுப்பதால் கம்யூனிஸ்ட் ஐக்கிய முன்னணியை அவர் பலவீனப்படுத்திக் கொண்டிருப்பதாகச் சூஎன்லாய் கருதுகிறார். இதன் மூலமாக ஆசியாவில் சீன கம்யூனிஸத்திற்கு ஆதரவு குறையும் என்றும் 'சூ' கருதுகிறார். குருஷ்சேவ், மாசேதுங் மீது தீவிரமான எதிர்த்தாக்குதலையும் நடத்தி வருவதாக 'சூ' சுட்டிக் காட்டுவதாகக் கூறப்படுகிறது. சீன சம்பந்தமாக கென்னடி நிதானமான போக்கைப் பின் பற்றி வருவது பற்றி சூ திருப்தியடைந்துள்ளார் என்று தெரிகிறது.

## சர்ச்சிலின் மகள் காவலில்!

லண்டன், ஜூலை 16

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலின் புதல்வியான சாராசர்ச்சில் என்ற நடிகை நேற்றிரவில் பெண்கள் சிறையில் வைக்கப்பட்டார். குடித்துக் கலாட்டா செய்த குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டார்.

வைத்திய அறிக்கைக்காக ஜூலை 27ம் திகதிவரை அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதே குற்றத்திற்காக அவர் பல முறை நீதி மன்றத்திற்கு வந்திருக்கிறார்.

## பர்மா வாழ் இந்தியர்

புதுடில்லி, ஜூலை 17

பர்மாவிலிருந்து இந்தியப் பிரஜைகள் மணியார்டர் அனுப்புவதற்கு மீண்டும் வசதி அளிப்பது பற்றி பர்மிய அரசாங்கம் விரைவில் ஒரு முடிவுக்கு வரும்என்று தெரிகிறது.

இது சம்பந்தமாக ரங்கூனில் உள்ள இந்திய ஸ்தானிகருக்கும் பர்மிய அரசாங்கத்துக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. மணியார்டர் வசதிகளை துஷ்பிரயோகம் செய்யாத வகையில் ஒரு ஏற்பாட்டை வகுக்கப் பர்மிய அரசாங்கம் விரும்புவதாகத் தெரிகிறது.

## தமிழ்நாடு பி. சோ. கட்சி

கோயம்புத்தூர், ஜூலை 16

கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன் கட்சி எவ்வித கூட்டுறவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தமிழ்நாடு பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ பி. எஸ். சின்னத்துரை இன்று இங்கு கூறினர்.

கடந்த தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியுடன் பி. சோ. ஏதோ தேர்தல் உறவு கொண்டிருந்த போதிலும், சோவியத்யூனியனுக்கு விஜம் செய்த பிறகு கம்யூனிஸம் பற்றி நினைக்கக் கூடாது என்று தான் உறுதியாக நம்புவதாக அவர் கூறினர்.

## சின்ன அண்ணாமலை காங்கிரஸில் சேர்ந்தார்

சென்னை, ஜூலை 17

காங்கிரசிலிருந்து விலகிவிட்டிருந்த ஸ்ரீ சின்ன அண்ணாமலை மீண்டும் காங்கிரஸில் சேர்ந்தார்.

காமராஜின் 59வது பிறந்த தினக் கொண்டாட்டம் நேற்று சென்னையில்நடைபெற்றபோது ஸ்ரீ சின்ன அண்ணாமலை தனது முடிவைப்பற்றி அறிவித்தார்.

பஞ்சாலைத் தொழிலாளர்கள் அளித்த விருந்தில் அவர் இவ்வாறு கூறினர்.

ராஜ்யத்தின் 6 பார்லிமெண்டரி தொகுதிகளிலும் அபேட்சகர்களை நிறுத்த பி. சோ. கமிட்டி முடிவு செய்தது.

## காஷ்மீர்: நேருவைத் தூண்ட கென்னடி இணக்கம்

### அயூப்கான் தகவல்

நியூயோர்க், ஜூலை 17

காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பதற்கு இந்தியப் பிரதமர் நேருவை, தாம் தூண்டுவதாக அமெரிக்க ஜனாதிபதி கென்னடி ஒப்புக்கொண்டுள்ளார் என்று பாக்கிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் டெலிவிஷனில் பேட்டியளித்துப் பேசுகையில் கூறினர்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியுடன் தாம் சமீபத்தில் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது நேருவைத் தூண்டுவதற்கு திரு. கென்னடி இணங்கினர் என்று மார்ஷல் அயூப்கான் தெரிவித்தார்.

பாரத—பாகிஸ்தான் எல்லையில் இரு நாட்டுப் படைகளும் ஒன்றையொன்று எதிர்நோக்கிக்கொண்டிருப்பதால் ஆபத்தான நிலைமை ஏற்படக் கூடுமென்று ஜனாதிபதி அயூப் தெரிவித்தார்.

ஆசியாவில் தலைமைப் பீடத்தைப் பிடித்துக் கொள்ளவே அமெரிக்காவிடமிருந்து இந்தியா உதவி பெறுவதாகவும் ஜனாதிபதி அயூப் கூறினர்.


## 'சிரநேத்திராஞ்சன தைலம்'

விடுதலையளிக்கும்போது
நீங்கள்
சிரசு கண் மூக்கு
சம்பந்தமான வியாதிகளினுல் துன்புறவும்
வேண்டுமா?
தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த
ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்!
காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு
கொள்ளவும்.

**மு. க. ஜெகநாதன்**
யூனனி கண் நிபுணர்
பெரியகடை யாழ்ப்பாணம்




# தென் வியட்னும் மீது கொரில்லாப்படை புதிய தாக்குதல்

## பலர் மாண்டனர்

சைகோன், ஜூலை 17

தென்வியட்நாமின் தலைநகரான சைகோனுக்கு தெற்கே 80 மைல் தூரத்தில் கம்யூனிஸ்ட் கொரிலாக்களை எதிர்த்து தென்வியட்நாம் அரசாங்கத் துருப்புக்கள் நடத்திய தாக்குதலில் 187 கொரிலாக்கள் கொல்லப்பட்டனர். பலர்காயமடைந்தனர். ஒன்பது பேரை தென்வியட்நாம் அரசாங்கத் துருப்புக்கள் கைதியாக்கின.

இயந்திரத் துப்பாக்கிகளும் மற்றும் ஆயுதங்களும் கொரில்லாக்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

தென்வியட்நாம் சுதந்திரமடைந்தபின் கம்யூனிஸ்ட் கொரில்லாக்களுடன் நடத்திய போராட்டங்களில் இதுதான் மிகப் பெரியது என்று தென்வியட்நாம் பிரதமர் தெரிவித்தார்.

தென்வியட்நாம் அரசாங்கத்துக்கு இது ஒரு பெரும் வெற்றியென்று தென்வியட்நாம் பாதுகாப்பு மந்திரி கூறினர்.

கம்யூனிஸ்ட் கொரிலாக்கள் எல்லைக்குள் புகுந்து வந்ததை அரசாங்கத்துக்கு மக்கள் தெரிவித்ததாகவும் இத் தகவல் கிடைத்ததும் அரசாங்கத் துருப்புக்கள் அங்கு சென்று ஒளித்திருந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

கொரில்லாக்கள்மீது தாக்கிய போது அவர்களும் திருப்பித் தாக்கியதாகவும் அரசாங்கத் துருப்புக்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாத கொரில்லாக்கள் வடக்கு நோக்கி ஓட்டம் பிடித்ததாகவும் அவர்கள் அத்தனை பேரும் அழித்தொழிக்கபபட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கொரில்லாக்கள் பலர்மறைந்திருப்பதாகவும் அங்கு தொடர்ந்தும் சண்டை நடக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இச் சண்டையில் தென்வியட்நாம் அரசாங்கத் துருப்புக்கள் 12 பேர் மாண்டனர். 64 பேர் காயமடைந்தனர்.

## 15,000 டாலர் செக் அயூப்பிடம கொடுக்கப்பட்டது

நியூயார்க், ஜூலை 17

பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான் நியூயார்க்கிலிருந்து டெக்ஸாஸ் மாகாணத்துக்குப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்பாக நியூயார்க்கிலுள்ள பாகிஸ்தான் மாணவர்சம்மேளனம்,கிழக்குப் பாகிஸ்தானில் சமீபத்தில் வீசிய சூருவளியினல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளிப்பதற்காக 15,000டாலருக்குரிய செக் ஒன்றை ஜனுதிபதியிடம் வழங்கியது.

## தென்கொரியா பொருளாதார அபிவிருத்திக்கு அவசரத்திட்டம்

சியோல், ஜூலை 17

தென்கொரியாவின் பொருளாதார அபிவிருத்திக்காக அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தென்கொரியப் பிரதமர் அறிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்க்கவும் இந்த அவசர நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதமர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளில் வர்த்தகர் மீதுள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமென்றும் அந்நிய மூலதனங்களுக்கு ஊக்கமளிக்கபபடுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

## நேப்பாளத்திற்கு நான்கு கட்ட அரசியல் திட்டம்

காட்மாண்டு, ஜூலை 17

நேப்பாளத்தின் ஆட்சிநிர்வாகப் பொறுப்பை சென்ற வருடம் நேப்பாள மன்னர் ஏற்றுக்கொண்டபின் அரசியல் தலைவர்களைக் கைது செய்வதற்காக பிறப்பிக்கப்பட்ட'வாரண்டுகளின்படிகைது செய்யப்படாமலுள்ள சில தலைவர்கள் இனிக் கைது செய்யப்படமாட்டார்கள். நாட்டில் அமைதி நிலவுவதை உத்தேசித்து அந்த 'வாரண்டுகள்' ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டுக்கு வெளியேயுள்ள அரசியல் தலைவர்கள் இனி தாய்நாடு திரும்பி அமைதியாக வாழலாமென்று நேப்பாள உள் விவகார மந்திரி அறிவித்துள்ளார்.

நான்கு கட்டங்களைக் கொண்ட புதிய அரசியல் முறையொன்றையும் நேப்பாள அரசாங்கம் அறிவித்துள்ளது.

கிராம சபை, ஜில்லா சபை, பிராந்திய சபை, தேசீய சபை யென நான்கு கட்டங்களை நேப்பாளம் கொண்டிருக்கும் இச் சபைகளுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் சில அங்கத்தவர்களை மன்னர் நியமிப்பார்.

தேசிய சபைக்கு மன்னரே தலைமை வகிப்பார். இச் சபை மன்னருக்கு ஆலோசனைகூறும் சபையாக இருக்கும்.

இன்றுள்ள நிலையில் நேப்பாளத்துக்கு பார்லிமெண்டரி ஜனநாயகம் பொருந்தாது என்று நேப்பாள உள்நாட்டு மந்திரி தெரிவித்தார்.

## "குவாய்த் பிரச்னைக்கு அரபு நாடுகள் தீர்வுகாணவேண்டும்"

### சாஹூதி அரேபிய தூதர் வற்புறுத்து

கெய்ரோ, ஜூலை 17

"குவாய்த் பிரச்னைக்கு அரபு நாடுகள் ஒரு தீர்வுகாணவேண்டியது மிக மிக அவசியம்" என்று கெய்ரோவிலுள்ள சாஹூதி அரேபிய தூதர் ஒரு அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்.

குவாய்த் விஷயத்தை அரபுலீக் இன்னமும் தாமதம் செய்வது ஆபத்துக்கு வழி வகுக்கக் கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

குவாய்த்தின் சுதந்திரத்தை அரபுலீக் அங்கீகரிக்கவேண்டும். அத்துடன் குவாய்த்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அரபுநாடுகள் முன்வர வேண்டும். அப்பொழுது தான் குவாய்த்திலிருந்து பிரிட்டிஷ் துருப்புக்களை வெளியேற்ற முடியும் என்று சாஹூதி அரேபிய தூதர் கூறினர்.

குவாய்த் சம்பந்தமாக அரபு நாடுகள் ஒரு உடன்பாட்டுக்கு வந்து ஒப்பந்தமொன்றுசெய்து கொள்ளவேண்டுமென்று அவர் குறிப்பிட்டார்.

இதுசம்பந்தமாக ஐக்கிய அரபுக் குடியரசும் சாஹூதி அரேபியாவும் கூட்டுநடவடிக்கை எடுக்கத்திட்டமிட்டுள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

குவாய்த்தின் சுதந்திரத்தை லிபியா அங்கீகரிப்பதாக லிபியா சென்றுள்ள குவாய்த்தின் நல்லெண்ணத் தூதுக் கோஷ்டியிடம் லிபியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

### காசிம் மீண்டும் வலியுறுத்து

குவாய்த் ஈராக்கின் ஒரு பகுதியென்ற தமது கோரிக்கையை ஈராக் பிரதமர் மேஜர் ஜெனரல் காசிம் நேற்று மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

குவாய்த் மீதுள்ள தனது உரிமையை ஆயுத பலத்தினல் பெற்றுக்கொள்ளக்கூடிய வலிமை ஈராக்கிற்கு இருக்கின்றபோதிலும் சமாதானமான முறையிலேயே உரிமையை அடைவதற்கு ஈராக் முயற்சி செய்யும் என்று ஜெனரல் காசிம் சொன்னர்.

பாக்தாத்திலிருந்து பஸ்ரா வரை போடப்பட்டுவரும் ரயில் பாதையை ஈராக்கின் நபரான குவாய்த்வரை விஸ்தரிக்கப்படும் என்று ஜெனரல் காசிம் அறிவித்தார்.

## கலாசார தூதுக் கோஷ்டி

கொழும்பு, திங்கள்

ஐக்கிய அரபுக் குடியரசில் இருந்து இங்கு வந்த கலாச்சாரத் தூதுக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் சினிமாப் பட ஸ்தாபனத்தைச் சேர்ந்த இருவர், ஐக்கிய அரபுக் குடியரசு இங்கு ஏற்படுத்தும் கண்காட்சியைத் திறந்து வைப்பார்கள்

அப்துல் சலம் மௌசா, ஜீ. தல்ஹாமி ஆகிய இருவர் உள்ள இக் கோஷ்டியினர் தொழில் கலாச்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவைச் சந்திப்பார்களென எதிர் பார்க்கப்படுகிறது.

அரசாங்க, தனியார் சினிமாத் தொழில் அதிபர்களுடன், தமது நாட்டுப் படங்களை இங்கே விநியோகிப்பது பற்றி இவர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்துவர்.

## அங்கோலாவில் துருப்புக்கள் பெருமளவில் தாக்குதல்

லிஸ்பன், ஜூலை 17

மழைகாலத்தைப் பயன்படுத்திக்கொண்டு அங்கோலாவிலுள்ள போர்ச்சுக்கல் துருப்புக்கள் வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகளை எதிர்த்து பெரிய அளவில் தாக்குதல் ஆரம்பித்துள்ளனர்.

நாம் வாங் என்ற இடத்தில் சில தினங்களாக தேசியவாதிகளுக்கும் போர்ச்சுக்கல் துருப்புக்களுக்குமிடையில் கடும் சண்டை நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

மற்ரெரு இடத்தில் போர்ச்சுக்கல் துருப்புக்களை எதிர்த்து சுமார் இரண்டாயிரம் தேசீயவாதிகள் தங்கள் பலம் கொண்டவரை போராடினர்களென்றும் பெருத்த ஆட்சேதத்தின்பின் அவர்கள் பின்வாங்கினரென்றும் போர்ச்சுக்கல் செய்திஸ்தாபனம் அறிவித்தது. இச்சண்டையில் 6 துருப்புக்கள் காயமடைந்தனராம்.

சில வாரங்களுக்குமுன் போர்ச்சுக்கல் துருப்புக்களிடமிருந்து தேசீயவாதிகள் கைப்பற்றிய ஒரு கிராமத்தை போர்ச்சுக்கல் துருப்புக்கள் மீண்டும் பிடித்துக் கொண்டனர்.

300 தேசிய வாதிகள் கடுமையாக எதிர்த்துக் கொண்டிருந்த ஒரு கிராமத்திலும் தேசியவாதிகளைத் துருப்புக்கள் அடக்கிவிட்டதாகவும் இதில் இரண்டு துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் போர்ச்சுக்கல் செய்திஸ்தாபனம் அறிவித்தது.

மூன்று தினங்களுக்கு முன் ஒரு கிராமத்தில் தேசீயவாதிகளை எதிர்த்து துருப்புக்கள் தாக்குதல் நடத்தியதில் 500 தேசியவாதிகள் கொல்லப்பட்டனர்.

## தி.மு.க. மகாநாடு தீர்மானம்

மதுரை, ஜூலை 17

'திராவிடநாடு பெற்றே தீருவோம்" என்று தி. மு. க. பொதுச் செயலாளர் திரு சி. என். அண்ணுத்துரை நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கூறினர்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற திராவிடமுன்னேற்றக் கழகத்தின் நான்கு நாள் மகாநாடு நேற்றுடன் முடிவடைந்தது.

நேற்றுமாலை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. அண்ணுத்துரை திராவிடநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினர்.

சரித்திரம், இனம், பொருளாதாரம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டது திராவிடநாட்டுக் கோரிக்கை என்று திரு அண்ணுத்துரை கூறினர்.

## நேரு-பக்ஷி ஆலோசனை

ஜம்மு, ஜூலை 17

காஷ்மீரில் மூன்றுதினங்கள் தங்கியிருப்பதற்காக நேற்று இங்கு வந்துசேர்ந்த பாரதப் பிரதமர் நேரு காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம்முகம்மதுவுடன் ஆலோசனை நடத்தினர்.

காஷ்மீர் ராஜ்யத்தின் வடக்கு எல்லைநிலைமை பற்றியும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் இவர்கள் விவாதித்ததாகத் தெரிகிறது.

## பாஸ்போட் வரியோசனை கைவிடப்பட்டது

கொழும்பு, திங்கள்

பாஸ்போர்ட் கோரி மனுச் செய்யும் ஒவ்வொருவரிடமும் 500 ரூபாய் கட்டணம் அறவிடுவது பற்றி குடியேற்ற வெளியேற்ற இலாகாவிடம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு கோரியிருந்தது

இந்த பாஸ்போர்ட் வரி யோசனையை பாதுகாப்புவெளி விவகார அமைச்சு கைவிட்டு விட்டது.

உலகில் எந்த நாடுமே இப்படி பாஸ்போர்ட் வரி விதிக்கவில்லையென்று சுட்டிக்காட்டப்பட்டதுதான் இதற்குக் காரணமென்று தெரிகிறது.

## கோயமுத்தூரில் டாக்டர் ஒக்பாரா

கோயமுத்தூர், ஜூலை 17

கிழக்கு நைஜிரியப் பிரதம மந்திரி டாக்டர் ஒக்பாரா நேற்று கொச்சியிலிருந்து உலகமண்டலம் செல்லும் வழியில் கோயமுத்தூருக்கு வந்துசேர்ந்தார். கோயமுத்தூரில் விவசாயப் பண்ணைகளையும், பல ஆலைகளையும் சென்று பார்த்தார்

## குவாலியர் மகாராஜா மரணம்

பம்பாய், ஜூலை 17

குவாலியர் மகாராஜா ஜீவாஜிராவ் தமது 45 வது வயதில் நேற்றுக் காலமானர்.

## காங்கோ பார்லிமெண்ட்

## ஷோம்பேக்கு ஐ. நா. பிரதிநிதிகள் எச்சரிக்கை

லியப்போல்ட்வில்லி. ஜூலை 17

காங்கோ பார்லிமெண்டின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக ஸ்டான்லிவில்லி மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்த 64 எம்.பி.க்கள் லியப்போல்ட்வில்லிவந்து சேர்ந்துள்ளனர். ஸ்டான்லிவில்லி அரசாங்கத்தின் தலைவரும் லுமும்பா ஆதரவாளருமான திரு. கிஸங்கா இன்னும் லியப்போல்ட்வில்லி வந்து சேரவில்லை.

பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்துகொள்வதா இல்லையா என்பது பற்றி கடாங்காவின் இதர மந்திரிகளுடன் கடாங்கா அதிபர் ஷோம்பே பேச்சு வார்த்தை நடத்திவருவதாக கூறப்படுகிறது. பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு ஷோம்பே விரும்புகிருரென்றும் மந்திரிகள் சிலர்தான் விரும்பவில்லையென்றும் தெரிகிறது.

காங்கோ பார்லிமெண்டின் இரு சபைகளிலும் மொத்தம் 221 பேர் அங்கம் வகிக்கின்றனர். 175 அங்கத்தவர்கள் பார்லிமெண்டின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக லியப்போல்ட்வில்லியில் இப்பொழுது உள்ளனர்.

பார்லிமெண்ட் கூடும் திகதி லியப்யோல்ட்வில்லி அரசாங்கத்தின் பிரதமர் இலியோவினல் அறிவிக்கப்படும்.

காங்கோ பார்லிமெண்ட் கூட்டத்தில் கடாங்கா மாகாணப் பிரதிநிதிகள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாவிட்டால் கடாங்கா அதிபர் ஷோம்பே வெளி உதவி எதுவுமின்றி தனித்து ஒதுக்கப்படுவார் என்று காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதிகள் திரு. ஷோம்பேயிடம் எச்சரித்துள்ளதாகத் தெரிகிறது.

## பனங்கட்டிக்கு தட்டுப்பாடு

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரிப் பனங்கட்டிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. பத்துச் சதம் விற்ற ஒரு பனங்கட்டிக் குட்டான் முப்பத்தைந்து சதமாக விலைப் பட்டது.

### மணிவாக்கு

பகைவரை ஒடுக்குவதைவிடத் தன்செய்கைகளால் தன்மேம்பாட்டைப் பெருக்கிக்கொள்வது சிறந்தது. —ஓர் அறிஞர்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு
ஆடி மீ 3 உ (18-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## திருக்கோணமலை கோவில் திருப்பணி

ஈழநாட்டிலே பாடல்பெற்ற இரு புனித ஸ்தலங்களில் ஒன்றான திருக்கோணமலைச்கோவில் இன்னும் பூர்த்தியாகி கும்பாபிஷேகம் ஆகாமல் இருப்பது இந்து சமூகத்துக்கே ஒரு பெரிய இழுக்காகும்.

போர்ச்சுகீயர்கள் தங்கள் அறியாமையால், சோழ மன்னர் கட்டிய இக்கோவிலை இடித்து, இராணுவக் கோட்டை கட்டினார்கள். அவர்கள் ஆட்சியில் நடந்த சமய அடக்குமுறையில் இங்கு பல இந்துக் கோவில்களும் இடிக்கப்பட்டன. அந்தக் கொடுங்கோல் ஆட்சி ஒன்றரை நூற்றுண்டுக்குப் பின் மறைந்தது.

இடிக்கப்பட்ட கோவில்களில் பலவும், பின்னர் மீண்டும் கட்டப்பட்டன. மற்றோர் பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீச்சரம் கோவில் திருப்பணி வேலைகள் நடந்து வருகின்றன. ஆனல் திருக்கோணமலை கோவில் திருப்பணி அரைகுறையாக விடப்பட்டிருக்கின்றது. இக்கோவில் திருப்பணிக்காக அரசாங்க கலாச்சார இலாகாவும் இரண்டு மாதங்களுக்கு முன்பாகப் பத்தாயிரம் ரூபாய் மான்யம் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்த மான்யத்தொகை போதாதென்றும், இக்கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்ய இன்னும் நாற்பதினயிரம் ரூபாய் தேவைப்படுவதாகவும் தெரியவருகிறது. இத்தொகை இத்தீவிலே இரண்டாவது பெரிய சமூகமாக வாழும் சைவர்களுக்குப் பெரிதல்ல. சைவ சமூகத்துக்குப் பெருமையும் ஆக்கமும் அளிப்பது அவர்களது ஆலயங்களே. அதிலும் புராதனபாடல்பெற்ற ஸ்தலங்கள் மிகப் புனிதமும் சர்வதேச முக்கியமும் வாய்ந்தவை. ஈழநாட்டிலும் சிறப்பாகக் கிழக்குமாகாணத்திலும் சைவ சமூகம் மீண்டும் புத்துயிர் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டுமாயின், பாடல்பெற்ற திருக்கோணமலைக் கோவிலின் திருப்பணி சீக்கிரத்தில் பூர்த்தியாகவேண்டும்.

கோவில்கள் சமூகத்தின் பொதுவுடமை. பல கலைகள் வளர்க்கவும் சமூக தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கூடிய வாய்ப்பு கோவில்களுக்குண்டு. பாடல்பெற்ற திருக்கோணமலை கோவில் இந்தியாவிலும் புகழ் பெற்றது. அங்கிருந்து பல யாத்திரீகர்கள் யாத்திரையாக வருகின்றார்கள். அதை இனியும் எக்காரணம் பற்றியும் அரைகுறையாக விட்டுவைக்கக் கூடாது. கூடிய சீக்கிரத்தில் அதைக் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்தி நித்திய பூசைகள் நடைபெறும்படி செய்ய வேண்டும். சமயமும் சமூகமும் மீண்டும் புத்துயிர்பெற்று வாழவும் இது இன்றியமையாததாகும்.

# முத்தமிழ் வளர்த்த விபுலாநந்தர்

## மட்டக்களப்பில் அடிகளாரின் கல்வி, சமயப் பணிகள்

**முத்தமிழ் வித்தகரான விபுலானந்த அடிகளார் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும், சைவசமய விருத்திக்காகவும் சலியாது உழைத்தவர்கள். கிழக்கு மாகாணத்தில் எத்தனையோ கலாசாலைகளை நிறுவி சைவ சமய விருத்திக்காக அரும்பணி புரிந்தவர்கள். அவற்றுள் கல்லடி உப்போடையிலுள்ள சிவானந்த வித்தியாலயம் அடிகளாரின் கலைக்கோயிலாக விளங்குகின்றது. இம்மாதம் 19-ந் திகதி விபுலானந்த அடிகளார் திருநாள் கொண்டாடப்பெறும். அடிகளாரின் சேவைகளைப்பற்றி அன்பர் ஒருவர் எழுதிய கட்டுரை இங்கு வெளியாகியுள்ளது.**

இராமகிருஷ்ண சங்கமானது இந்நாட்டு மக்களின் கல்வி விருத்திக்காகச் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களில் பணி ஆற்றியுள்ளது. தவத்திரு விபுலாநந்த அடிகளாரும் அவரைப் பின் தொடர்ந்த சகோதர சந்நியாசிகளும் இருபத்தாறு கல்வி நிலையங்களை உருவாக்கினர். அவற்றுள் மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்துடன் இணைந்துள்ள குருகுலம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. வீரத்துறவி விவேகாநந்தர் கூறிய மெய்ஞ்ஞானத் தொடர்புடைய விஞ்ஞானக் கல்வி முறையைச் செயல்படுத்தும் முறையில் குருகுலம் அமைந்துள்ளது

இந்தக் கல்வி நிலையம் மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் அமைந்துள்ளது. இங்கு சாதுக்கள் வசிப்பதற்கு ஆச்சிரமமும், ஆசிரியர்களுக்கு விடுதிகளும், மாணவர்களுக்கு இல்லங்களும் உண்டு. அவையனைத்துக்கும் மத்தியில் நடுநாயகம்போல் விளங்குவது சிவாநந்த வித்தியாலயம். இது அடிகளாரின் ஞானசாரியரான பேலூர் மடத்து அருள்வள்ளல் சிவாநந்த மகாபுருஷரின் பெயரைத் தாங்கி விளங்குகின்றது.

அடிகளார் முறைப்படி தமிழ், சமயம் என்னுந் துறைகளில் கற்றுணர்ந்த பண்டிதர் ஆவ அத்துடன் மேனாட்டு முறைபடி ஆங்கிலம், விஞ்ஞானம் என்னும் துறைகளில் நன்கு பயின்று பட்டமும் பெற்றவர். ஆகவே, மேனாட்டுக்கலைகளும், கீழ்நாட்டுக் கலைகளும் ஒருங்கு சேர்ந்து அமையப்பெற்ற ஒரு பேரறிஞராக அவர் நமக்குக் காட்சியளித்தார்.

### மந்திரச்சொல்

கல்வி என்னும் மந்திரச் சொல்லினல் தீர்க்கமுடியாத தொன்றில்லை என்பது விவேகாநந்தரின் அருள்வாக்கு. இதுவே நமது அடிகளாரின் மூலமந்திரம் மனிதனை மனிதனக்குங் கல்வி; அறம், வீரம், ஈரம் என்னும் நற்பண்புகளை வளர்க்குங் கல்வி; சுயநலம்நீங்கிப் பிறர் நலம் ஓம்பும் கல்வி; சமத்துவமும் சகோதரபாவமும் ஒருங்கே அமையப்பெற்ற கல்வி; அறிவுஆற்றல்களை அருங்கலன்களாகக் கருதும் கல்வி; தொழில் நுட்பம், விஞ்ஞானம், பொறியியல், நுண் கலைகள் இடம்பெறுங் கல்வி; இத்தகைய பலநோக்குக் கல்வி முறைகளால் சமுதாய இன்னல்களைப் போக்குவதற்கு முயன்றார்.

இக்காலத்திற்கேற்ற குருகுலக் கல்விபே, கற்போருக்குச் சிறந்தது என்பது அடிகளாரின் சித்தாந்தம். குருவும் சீடரும் ஒன்றுகூடி வாழ்ந்து கலை வளர்க்கும் குலகுலங்கள், வீடுபோலும் பாடசாலை போலும் அமையவேண்டும். ஆசிரியர்களைக் கண்டு பயப்படும் மாணவர்களைக் கண்டு அடிகளார் நெஞ்சு பொறுக்கவில்லை. 'ஒருநாடு நலம்பெற வேண்டுமானல் ஆசிரியர் மாணவரிடம் அன்பினை அள்ளிச் சொரியவேண்டும். அன்பு நெய் ஊற்றினல் அறிவுச்சுடர் தானே வளரும. அகவிருள் நீங்கும். இன்ப வாழ்வு வீடுதோறும் பலரும் இன்ப வாழ்வு இல்லந்தோறும் பெருக நாடு நலனுறும்' என்ற உண்மைகளை அடிகளார் தமது செயல்மூலமும் சொல்மூலமும் பரப்பினர்.

### தாய்மொழிக் கல்வி

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே தாய்மொழி மூலம் நமது மாணவருக்கு எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்படவேண்டுமென்று அடிகளார் கூறியுள்ளார். அதை நிறைவேற்றுவதற்கு விஞ்ஞானபண்டிதர்களை முயலுமாறு தூண்டினர். அத்துடன் அமையாது தாய்மொழியில் பயிலும் ஆசிரியர்களுக்கு உயர்தரக்கணித அறிவினை வளர்ப்பதற்குத் தாமே யாழ்நூலை இயற்றினர். அதில் இசையானது கால அளவை அடிப்படையாகக் கொண்டே வளர்வுற்றது என்பதை நன்கு விளக்கியுள்ளார். கணிதமும், தர்க்கமும் கற்போருக்கு நுண்ணறிவு வளர்ச்சியுறும். பன்மொழிப்பயிற்சியால் பரந்த அறிவுண்டாகும். மாணவரிடம் கூரிய கண், காது இருந்தால் ஆசிரியர் இல்லாமலே நல்ல புத்தகம் போல இந்தப் பூமி மாறிவிடும் என அடிகளார் கூறுவதுண்டு மாணவர்களை அன்பாகத் தட்டிக்கொடுத்து அருளுடன் அவர்களை நோக்கி மகிழ்ச்சியை உண்டாக்கி, மனதைச் செலுத்தி மகிழ்வுடன் பயிற்றவேண்டுமென்பது அடிகளாரின் கருத்து.

குழந்தைப்பருவத்தில் உடல் வளர்வுற அன்பு மனத்துடன் தாயார் அமுதப்பாலை ஊட்டுகிறர். அதனல் மாணவனின் உடல் துன்பமின்றிப் பூரண வளர்ச்சியடைகிறது. தாய்தந்தையர் தங்களால் இயலாத ஒரு அரும் பணியினைப் புரிந்து தம் மக்களைச் சான்றோனுக்குமாறு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கின்றனர். நல்லாசிரியர் இம்மகத்தான பொறுப்பினை உள்ளவாறுஉணரவேண்டும். உணரந்து அறிவுவளரத் துணைபுரிவதாகிய தொண்டினை அன்பு மனத்துடன் புரிந்து தாமும் இன்புறுவதோடுமாணவர்களும் இன்புறச் செய்ய வேண்டும்.

கற்க வரும் குழந்தைதனை உயர்வாக எண்ணவேண்டும்; உயர்வாக மதிக்கவேண்டும்; உயர்தற்பான்மையில் அழைக்க வேண்டும். இவற்றுல் ஆசிரியரின் நல்லெண்ணங்கள் கொல்லன் உலையிற் பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் பட்ட சம்மட்டி அடிபோல மாணவருடைய மனங்களில் என்றும் பதிவுறும். அன்றியும் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைப் போன்றும், சுவாமி விவேகாநந்தரைப் போன்றும், மகாத்மா காந்தியடிகளைப்போன்றும், கவீந்திரனகிய ரவீந்திரநாத் தாகூர் போன்றும் மிக மிக மேலான மக்கள் வருங்காலத்து மாணவர்களுள் தோன்றி, நமது சமுதாயம் பேரின்பப் பெருவாழ்வு வாழ வழிவகுத்து, இகபரமிரண்டினும் இன்புறுத்துவார்கள் என்பது அடிகளாரின் கற்பனையாகும்.

### மாணவர் வாழ்க்கை

இச்சீரிய நோக்கங்களைச் செயல்படுத்தும் முறையில் அடிகளார் மாணவர்களின் தினசரி வாழ்க்கையை அமைத்தனர். ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் ஆலயம் இதில் முக்கிய இடம் பெறுகிறது. அந்தச் சந்நிதானத்திலிருந்து சதாகாலமும் தெய்வ மணங்கமழ்ந்துகொண்டேயிருக்கிறது. சிறுவர்களே பூசாரியாகவும், தொண்டர்களாகவும் பணியாற்றுகின்றனர். காலையும், மாலையும், சூரியோதய-சூரியாஸ்தமன வேளைகளில் பூசை, பிரார்த்தனைகள் ஒழுங்காக நடைபெறும். பல்வேறு சமயத்தவர்களின் விசேட விழாக்களும், சமயாசாரியரின் குருபூசைகளும் குதூகலத்துடன் இங்கு கொண்டாடப்படும.

அதிகாலையில் மணியோசை கேட்கும் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடிக்கொண்டே மாணவர் துயிலெழுவர். அதன் பின்னர் தேகாப்பியாசம், ஸ்நானம் முதலியவற்றை முடித்துக்கொண்டு குருகுலத்தோர் எல்லோரும் சூரியோதய வேளையில் வெளி அரங்கில் கூடுவர். அங்கு சர்வமத சமரச கீதங்களை எல்லோரும் சேர்ந்து பாடுவார்கள். அதைத் தொடர்ந்து பத்து நிமிஷம் மௌன தியானம் அனுஷ்டிக்கப்படும். கூட்டங் கலைந்தபின் பல்வேறு மதத்தினரும் தத்தம் சம்பிரதா

(8-பக்கம் பார்க்க)

## "இந்தியர்" பிரச்சினை

தேர்தல் நெருங்க நெருங்க "இந்தியர்" பிரச்சினையை மிகைப்படுத்தி பூச்சாண்டி காட்டுவது, இங்கு சில அரசியல் வாதிகளின் பழைய வழக்கம் அதற்கேற்ப கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றி பலர் மிகைப்படுத்திப் பேசியிருப்பதும் வியப்பளிப்பதற்கில்லை.

சட்டவிரோதமாக வந்தவர்களுள்ளிட்டு இங்கு 18 லட்சம் இந்தியர் இருப்பதாயும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால், 30 வருடங்களில் பெரும்பான்மை சமூகம் சிறுபான்மை சமூகமாகிவிடுமென்றும், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, இப் பிரச்சினை தீருவதில்தான் அடங்கியுள்ளதென்றும், ஐக்கிய தேசியக் கட்சி அதிகாரத்துக்குவந்தால் அதன் தலைவர் இப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவாரென்றும் சிலர் பேசியிருக்கின்றனர்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி பல்லாண்டுகள் நிர்வாகஅதிகாரம் வகித்தது. என்றுலும் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதில் அது அதிக சிக்கலாக்கப்பட்டுள்ளது. இது கட்சிப் பிரச்சினையன்று. தேசியப்பிரச்சினை. பல கட்சிகள் மட்டுமன்றி இந்தியாவும், பிரிட்டனும்கூட சேர்ந்து இதை மனிதாபிமானத்துடன் தீர்க்கவேண்டும். காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் இது மனிதரைப்பற்றிய பிரச்சினையென்றும் மனிதாபிமானத்துடன் இதைத்தீர்க்க வேண்டுமென்றும் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் அன்பர் வந்தார். இரவு 11 மணிக்கு ஊரடங்குச் சட்டத்தை மீறி ஒரு பாம்பு வீட்டில் புகுந்து ஒரு குழந்தையைக் கடித்துவிட்டதாம். குழந்தையை ஆஸ்பத்திரிக்கோ, டாக்டரிடமோ கொண்டு செல்ல முடியாமல் ஊரடங்குச் சட்டத்துக்குப் பயந்து கைமருந்துகளைப் போட்டதாயும் குழந்தை பிழைத்துவிட்டதாயும் கூறினர். நல்ல வேளை.

ஆனல் இப்போது இங்கு ஊரடங்குச்சட்டம் அவசியம் தானு? இரவு 10 மணி முதல் காலை 4 மணிவரை இங்குள்ள ஊரடங்குச் சட்டத்தை இனி நீக்கிவிடக்கூடாதா? என்று அவர் கேட்டார்.

* * *

மற்றோர் அன்பர் கொழும்பிலிருந்து இங்கு வந்தார். அதிகாலை 3 மணிக்கு எழுந்து விளக்கேற்றி ஏதோ அவசரமாகக் கட்டுரை எழுதினராம். ஊரடங்குச்சட்ட காலத்தில் விளக்கு வெளிச்சம் தெரியப்படாதென்றும், ஆகவே குசினுக்குச் சென்று எழுதும்படியும் வீட்டிலிருந்தவர்கள் கூறியதாயும், பின் சமயலறைக்குச் சென்று காலை 5 மணி வரையும் தாம் எழுதியதாயும் தெரிவித்து, இங்கு இந்த ஊரடங்குச் சட்டம் இனியும் அவசியம் தானு? என்றுர்.

ஊரடங்குச்சட்ட காலத்தில் விளக்கணைப்பு உத்தரவு இல்லை என்றும் முதலில் இது பற்றிச் சில தப்பெண்ணங்கள் இருந்திருப்பினும் இப்போது அவை நீக்கப்பட்டுவிட்டதாயும் விளக்குகள் தாராளமாக எரியலாமென்றும் தெரிவித்தேன்.

* * *

காலையில் யாழ்ப்பாணத்திலிருந்துகொழும்புக்கும், மத்தியானம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் புறப்பட்ட இரு கடுகதி ரயில் வண்டிகளும் ஊரடங்குச்சட்ட காரணமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனல் மக்களுக்கு மிகவும் வசதிக்குவறவாக இருப்பதாயும், ரயில்வேக்கும் வருமானம் குறைந்துள்ளதாயும், இந்த ரயில் வண்டிகளை மீண்டும் விட வேண்டுமென்றும் யாழ்ப்பாண நகரசபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை நீக்கினல்தான் அந்த இரு ரயில் வண்டிகளையும் விடமுடியும். ஆகவே அரசாங்கம் இதைப் பற்றி எல்லாம் ஆலோசித்து ஊரடங்குச் சட்டத்தை நீக்கவோ, தளர்த்தவோ வேண்டும்.

இதைப்பற்றி எழுதத் தணிக்கை சட்டம் அனுமதிக்குமா? என்று என் பேனு தயங்கியது. அரசியல் சம்பந்தமின்றி, மனிதாபிமான காரணத்தாலே உந்தப்பட்டதால் இதை எழுதத் துணிந்தேன்.

* * *

ஜப்பானைச் சேர்ந்த யோக ஹாமாவிலிருந்துயோகிராஜ்சச்சிதானந்தர் ஒரு கடிதமெழுதியுள்ளார். "திருவருள் துணையால் எமது பணி இனிதே நடைபெற்று வருகிறது. ஹாங்காங்கில் சுமார் 100 நாட்கள். 8-ந் திகதி அங்கிருந்து விமான மூலம் ஜப்பானுக்கு வந்தேன். இங்கும் யோகப்பணி நடைபெறுகிறது. சுமார் 15 நாட்கள் இங்கிருந்துவிட்டு மீண்டும் ஹாங்காங், மணிலா, சைகோன், கோலாலம்பூர், சிங்கப்பூர் சென்று ஆகஸ்டு இறுதியிலாவது இலங்கை திரும்பலாமென்று எண்ணியுள்ளேன். அவன் சித்தம் எப்படியோ" என்று குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீரில் நேரு

# பாதுகாப்பு பிரச்சினை பற்றி மந்திராலோசனை

ஸ்ரீநகர், ஜூலை 17

பிரதம மந்திரி நேரு நேற்று காஷ்மீருக்கு விஜயம் செய்தார். அவர் காஷ்மீர் பிரதமர் பக்ஷி குலாம் முகம்மது, யூனியன் உள் நாட்டு மந்திரி லால்பகதூர் சாஸ்திரி இவர்களுடன் ஒரு மணி மந்திராலோசனை செய்தார். காஷ்மீர் நிலைமைபற்றியும், பாகிஸ்தானின் 'நேரடி நடவடிக்கை' பற்றிய நிலைமையையும் குறித்து கலந்து பேசியதாகத் தெரிகிறது.

காஷ்மீரில் சீக்கிரத்தில் பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது. அதுபற்றியும் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் காஷ்மீரின் தேவை பற்றியும் முதல் மந்திரி தெரிவித்தார்.

பின்னர் மாலையில் அவர் டால் ஏரிக்குச் சென்று பலருடனும் சம்பாஷித்தார்.

காலையிலே அவர் விமானத்திலிருந்து இறங்கியதும், அவரை விசேஷ மண்டபத்துக்கு காஷ்மீர் முதல் மந்திரி அழைத்துச் செல்லவிரும்பினர். "நான் விரும்பாததைச் செய்யும்படி கேட்காதீர்கள்" என்று கூறிவிட்டு, நேருஜி அங்கு கூடியிருந்த குழந்தைகளிடம் நேரில் சென்ருர்.

## அரசியல் தலைவர்களுக்கு 'அரஸ்ட் வாரண்ட்' நேபாளத்தில் 'வாபஸ்'

காட்மாண்டு

நேபாளத்தில் சட்டமும் ஒழுங்கும் நிலவுவதை முன்னிட்டு சென்ற டிசம்பர் மாதம் 15-ந் திகதிக்குப்பின் அரசியல் தலைவர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட 'அரஸ்ட் வாரண்ட்டு'களை வாபஸ் பெறுவதாக நேபாள உள் நாட்டு மந்திரி காரியாலயம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கின்றது.

இதுவரை 100 பேருக்கு மேல் தடுப்புக் காவலில் உள்ளனர். அதே எண்ணிக்கையானவர்கள் தலைமறைவிலுள்ளனர். அவர்களில் அதிகமானவர்கள் கம்யூனிஸ்ட் தலைவர்கள்.

நாட்டைவிட்டு வெளியேறிய தலைவர்கள், நேபாளத்துக்குத் திரும்பி அமைதியாக இனி வாழலாமென்றும் மந்திரி அறிவித்தார். ஆனல் அவசர நெருக்கடி உத்தரவுகள் எதுவும் மாற்றப்படவில்லை.

## கட்டாக்காலி மாடுகளால் குடியேற்றக்காரர்கள் அவதி

வட்டக்கச்சி, திங்கள்

வட்டக்கச்சியிலுள்ள குடியேற்றவாசிகள், கட்டவிழ்த்து விடப்படும் கட்டாக்காலி மாடுகளால் தமது நெற்பயிர் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இக்கட்டாக்காலி மாடுகளின் தொல்லையைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம்மூலம் தெரிவித்துள்ளார்கள்.

அக்கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:

கட்டாக்காலி மாடுகள் பதினைந்திலிருந்து இருபதுவரை எங்கள் நெல்வயல்களில் ஒரே சமயத்தில் வந்து நெற்பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. நெல்வயலைச்சுற்றி அடைக்கப்பட்டிருக்கும் வேலிகளுக்கு மேல் பாய்ந்து அவை நெல்வயல்களுக்குள் புகுந்து விடுகின்றன. நாம் அறுவடை செய்யும் காலம் வரையாவது இந்தகக்ட்டாக்காலி மாடுகளை அவிழ்த்து விடவேண்டாமென்று சொந்தக்காரர்களுக்கு கட்டளையிடவேண்டும். இது பற்றி அக்கறையுடன் கவனிக்கக் கூடிய குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர் ஒருவரை அனுப்பிவைத்தால் மிகவும் உதவியாக இருக்கும்.

## நியாயசபை நியமிக்கவும்

### பாடசாலை ஊழியர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாடசாலை ஊழியர்கள் நலன் பற்றிப் பரிசீலனை செய்யவும் சம்பளத் திட்டம்,சேவை நிபந்தனைகளைப்பற்றி முடிவு செய்யவும் ஒரு நியாயசபை நியமிக்குமாறு கல்வி மந்திரியையும் தொழில் மந்திரியையும் கேட்டுக் கொள்வதெனவட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வைத்தீசுவர வித்தியாலயத்தில் இச்சங்க வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. க. நடராசா தலைமை வகித்தார்.

கூட்டத்தில் திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், க. நவரத்தினம் ஆகியோரும் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் தேர்தலின்போது தலைவராக திரு. டி. ஜேம்சும், உபதலைவராக திரு. க. நடராசாவும், இணைக்காரியதரிசிகளாக க. நவரத்தினம், ஆர். சேனாதிராசா ஆகியோரும், பொருளாளராக திரு. ஏ. துரைசிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

## புதிய ஜே. பி.

### திரு.அமிர்தலிங்கம் நியமனம்

பிரபல சட்டவாதிகள் குடும்பத்தைச் சேர்ந்தவரான புறக்டர் திரு. ஏ. அமிர்தலிங்கம் யாழ்ப்பாணம் நீதிபரிபாலனப் பகுதிக்கு புதிய ஜே. பி. யாக நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என்.கிருஷ்ணதாசன் முன்னிலையில் ஜே. பி. யாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஊரெழு கொலை வழக்கு

# "மூன்ருவது எதிரியுடன் இறந்தவர் என் வீட்டில் தங்கினர்"

## மார்க்கண்டுவின் சிற்றன்னை கூறிய சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஊரெழு கொலை வழக்கு நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. பெருந்தொகையான மக்கள் கோர்ட்டில் கூடியிருந்தனர்.

மாரிமுத்து மார்க்கண்டு என்பவரைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும், கொலை செய்ததாகவும், கொலைக்குரிய சாட்சியங்களை மறைக்கக் காரணமாயிருந்ததாகவும் குற்றஞ்சாட்டி ஊரெழுவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஓவர்சியர் கந்தப்பிள்ளை செல்லையாவின் வேலைக்காரனை மாடசாமி, கார்சாரதி முத்துச்சாமி, செல்லையாவின் மகள் செல்வி சரஸ்வதி ஆகியோர்மீது இவ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பிராஸிக்கியூஷன் தரப்பில் சார்ஜண்ட் பி. முருகேசுவுடன் இன்ஸ்பெக்டர் கே. செபமாலை விசாரணையை நடத்தினர்.

திருவாளர்கள் வி. செல்லத்துரை ஆர். கே. செல்வரத்தினம் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியு. ஸி.யும், திரு. ஸி. எம். தர்மலிங்கமும் முதல் எதிரி மாடசாமியின் சார்பிலும் மூன்ருவது எதிரி செல்வி சரஸ்வதியின் சார்பிலும் ஆஜரானர்கள்.

இரண்டாவது எதிரி முத்துச்சாமியின் சார்பில் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. டி. கணேசலிங்கம் ஆஜரானர்.

காலஞ் சென்ற மார்க்கண்டுவின் நலனை திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் கவனித்தார்.

திரு. சிவசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஜூன் மாதம் 25-ம் திகதி காலை 10 மணியளவில் நீர்வேலி கந்தசாமி கோயிலுக்குச் சென்றிருந்தேன். காலை 11 மணியளவில் கோயிலிலிருந்து வீடு திரும்பும்பொழுது ரோட்டில் ஒரு கூட்டத்தைக் கண்டேன். இறந்த சடலம் ஒன்று கிடப்பதாகத் தெரிய வந்தது. நான் சடலத்தைப் பார்வையிடச் சென்றேன். காலஞ் சென்றவரை எனக்கு முன்பு தெரியாது. விசாரணை செய்வதற்காக பொலிஸ் வந்திருந்தது. காலஞ்சென்றவர் மார்க்கண்டு என்று எனக்கு பிறகு தெரிய வந்தது. காலஞ் சென்றவரின் கையில் ஒரு கைக்கடிகாரமும், சேட்பையில் கடிதங்களையும் கண்டேன். காயங்களும், வெட்டுக்களும் உடம்பில் காணப்பட்டன. கோப்பாய் பொலிசுக்கு அறிவித்தேன்.

### எனது சகோதரர்

23 வயதுடைய மாரிமுத்து ரத்தினம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஜூன் மாதம் 25-ம் திகதி நான் படம் பார்க்க யாழ்ப்பாணத்துக்கு சைக்கிளில் செல்லும் போது கரந்தன் என்ற இடத்தில் இறந்தவரின் சடலத்தைக் கண்டேன். நான் சடலம் இருந்த இடத்துக்குச் சென்று பார்த்தபோது அது எனது சகோதரரின் சடலம் என்பதைக் கண்டேன். கோப்பாய் பொலிஸார் அந்த இடத்துக்கு ஏற்கனவே வந்திருந்தார்கள். முதல் நாள் நான் சடையன் மார்க்கண்டுவுடன் சுன்னுகம் வழியாக யாழ்ப்பாணத்துக்குச் சென்று ஊரெழுவுக்கு வந்தேன். நான் கொட்டியாலடி மயானத்தில் மாடசாமியைப் பார்த்தேன். முதலாவது எதிரி, 'உனது சகோதரன் மார்க்கண்டு, செல்லையா வீட்டுக்கு வந்தபோது நான் அன்றிரவு அவனைப் பிடித்து வைத்திருந்ததாகக் கதையைப் பரப்புகின்ருன். அப்படி நான் பிடித்திருந்தால் அவன் என்னிடமிருந்து தப்பியிருக்க முடியுமா?' என்று என்னிடம் கேட்டார். நான் பொலிஸாரிடம் இரண்டு கடிதங்களைக் கொடுத்தேன். நான் அரைவாசி படித்த பின்னர் அவை காதல் கடிதங்கள் என்பதை அறிந்தேன். அவை யாரால் எழுதப்பட்டவை என்பது எனக்குத் தெரியாது. நான் பிரேத பரிசோதனையின் போது சடலத்தை அடையாளம் கண்டேன்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியு. ஸி. சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சி தெரிவித்ததாவது:

நான் எனது தந்தைக்கோ தாயாருக்கோ முதலாவது எதிரிக்கும் எனக்கும் மயானத்தடியில் நடைபெற்ற சம்பாஷணைபற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. சிறுபான்மை மகாசபையின் தலைவர் திரு. குணரத்தினம் என்னைப் பொலிஸுக்கு அழைத்துச் சென்ருர். இதற்கு முன், காதல் கடிதங்கள் பற்றியும் எனக்கும் மடாசமிக்குமிடையில் நடைபெற்ற சம்பாஷணை பற்றியும் நான் அவரிடம் கூறியிருந்தேன்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்: அரசியலும் கொலை வழக்கில் இடம் பெற்றுள்ளது.

வேலுப்பிள்ளையின் மனைவியான 40 வயதுடைய வள்ளிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

இறந்தவர் எனது சகோதரியின் மகன். ஊரெழு தெல்லிப்பளைக்கு இரண்டரை மைலுக்கு அப்பால் உள்ளது. நான் தெல்லிப்பளையில் வசிக்கின்றேன். கொலை செய்யப்பட்டவர் இறந்து ஒரு கிழமையின் பின்னர் பொலிஸார் என் வீட்டுக்கு விசாரணைக்காக வந்தார்கள். இறந்தவர் முன்னர் எவருடனும் என் வீட்டுக்கு வரவில்லை என்று நான் தவருகக் கூறிவிட்டேன். இரண்டு நாட்களுக்கு முன்னர் மூன்ரும் எதிரியுடன் இறந்தவர் என் வீட்டுக்கு வந்தார். அவர்கள் அன்றிரவு தங்கி அடுத்த நாள் சென்ருர்கள். பொலிஸார் மூன்ருவது எதிரியின் வீட்டுக்கு என்னை அழைத்துச் சென்று செல்வி சரஸ்வதியைக் காட்டி 'இதுதானு அந்தப் பெண்' என்று கேட்டார்கள். நான் 'ஆம்' என்றேன்.

சடலம் கண்டெடுக்கபபட்ட பின்னர் பொலிசார் எனது வீட்டுக்கு வந்தார்கள். அவர்கள் அப்பெண்ணைப்பற்றி விபரமொன்றும் கேட்கவில்லை. அன்றிரவு நான் பொலிஸ் ஸ்டேஷனில் தங்கியிருந்தேன். அடுத்த நாள் செல்லையாவின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன் அவர்கள் இதுதானு அந்தப் பெண் என்று கேட்டார்கள் நான் ஆம் என்றேன்.

வழக்கு ஆகஸ்ட் 11 ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

திரு. காமராஜ் ஜயந்தி

# 'மக்கள் திருப்தியுடன் வாழ்வதே ஜனநாயகத்துக்குஅடையாளம்'

## சென்னை முதல்வர் ஆட்சிக்கு மகாராஷ்டிர முதன்மந்திரி பாராட்டு

சென்னை, ஜூலை 17

சென்னை முதன் மந்திரி திரு. காமராஜ் மக்களின் தலைவர், இமயத்தை ஒத்தவர் என்று மகாராஷ்டிரபதி முதன் மந்திரி திரு. வை. பி. சாவன் பாராட்டினர்.

திரு. காமராஜின் சிறப்பான தலைமையின் கீழ் சென்னை ராஜ்யத்தில்உண்மையான ஜனநாயகம் நடைபெறுகிறதென்றும், இந்தியாவிலேயே திரு. காமராஜின் அரசாங்கம் தான் மிகஸ்திரமானது என்றும் திரு. சாவன் மேலும் கூறினர்.

சென்னை முதன் மந்திரி திரு. கே. காமராஜின் 59-வது பிறந்ததின விழாவைக் கொண்டாடுமுகமாக, சென்னை ராஜ்ய காங்கிரஸ் கமிட்டியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே திரு. சாவான் மேக்கண்டவாறு கூறினர்.

திரு. காமராஜ் மக்களின் தலைமைக்கு ஒரு சின்னமாக விளங்குகிருர். இந்தியசுதந்திரத்திற்கு பின் அவரது தலைமை ஒரு குறிப்பிடத் தகுந்த புதிய அம்சமாகும். அவர் ஒரு ராஜ்யத்திற்கு மட்டும் முதன் மந்திரியாக விளங்கவில்லை. தென்னக மக்களின் தலைவராக அவர் விளங்குகிருர் என்று திரு சாவன் கூறினர்.

திரு. சாவன் தொடர்ந்து பேசியதாவது:-

"ஜனநாயகம் இயங்கி வருகிறது என்பதை கண்டுபிடிக்க வேண்டுமானல் மக்கள் திருப்தியுடன் வாழ்கின்றனரா என்று காண வேண்டும். அது தான் ஜனநாயகத்தை மதிப்பிடுவதற்கான உண்மையான சோதனை. மக்களுக்கு நல்லது செய்து வருவதாக மாத்திரம் ஒருவர் அவர்களிடம் கூறினல் போதாது. தமக்கு நல்லது செய்ய யாரோ ஒருவர் முயற்சிகள் எடுத்து வருகிருர் என்று அவர்கள் தாங்களாக உணர வேண்டும். இந்தச் சோதனையை அடிப்படையாகக் கொண்டால் திரு. காமராஜின் தலைமையில் சென்னை ராஜ்யத்தில் உண்மையான ஜனநாயகநிர்வாகம்நடைபெறுகிறது என்று தயக்கமில்லாமல் கூற முடியும். அதோடு இந்தியாவிலுள்ள அரசாங்கங்களில் உங்கள் அரசாங்கம் மிக ஸ்திரமானது.

மாபெரும் இமய மலையைப் போல திரு காமராஜ் விளங்குகிருர். உலகிலேயே மிகப் பெரிய இமாலய சிகரம் இந்தியாவிலேயே உள்ளது. அப்படிப்பட்ட நமது நாடு, அம்மலைக்கு நிகரான பெருமக்களை அடிக்கடி நமக்குத் தந்துள்ளது. திரு. காமராஜ் அத்தகையோரின் வரிசையில் தோன்றியவர்.

தனிப்பட்ட நபர்கள் என்று எடுத்துக்கொண்டால், யாருமே முக்கியமானவர்களில்லை. அவர்களது கருத்துக்கள், லட்சியங்களே முக்கியம். இந்த முறையில் பார்க்கப்போனல் விடுதலை பெற்ற பிறகு உள்ள இந்தியாவில், திரு. காமராஜ் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிருர்."

## மந்திரியைப் பேட்டிகாண பண்டிதர்கள் கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்க இணைச் செயலாளர் திருவாளர்கள் த. கிருஷ்ணபிள்ளையும், கே. வீரகத்தீயும், பண்டித, வித்துவான்மாருக்குப் பட்டதாரிகளின் சம்பளம் வழங்குவது பற்றியும், பண்டித,வித்துவான்மாரின் மாற்றங்கள் பற்றியும் வேறு தொடர்பானபல விடயங்கள் பற்றியும் கலந்தாலோசிப்பதற்காக ஒரு பேட்டி காணச் சந்தர்ப்பமளிக்குமாறு கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளனர்.

# 'மற்றவர்களின் உரிமையையும் மதிக்கவேண்டும்'

## கல்லூரி பரிசளிப்புவிழாவில் அமெரிக்க ஸ்தானிகர்

கண்டி, ஞாயிறு

"நீங்கள் 18 வயதை அடைந்ததும் ஒரு அரசாங்கத்தைத் தெரிவுசெய்யும் அதிகாரம் உங்களுக்குக் கிடைக்கும். அப்பொழுது நீங்கள் ஒரு ஜனநாயக அரசாங்கத்தைத் தெரிவுசெய்ய வேண்டும்." என்று இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் செல்வி பிரான்ஸிஸ் ஈ.வில்லிஸ் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

"தெரிவு செய்யும் அதிகாரத்தை எப்பொழுதும் சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். ஆனல் இந்த அதிகாரத்தை அளவுக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது' மற்றவர்களின் உரிமைகளையும் மதித்து நடக்க வேண்டும். எங்கள் நாட்டில் எல்லோரையும் சமமாகவே நடத்துகிருகள் .எங்மே நாட்டு அரசாங்கம் ஜனநாயக அரசாங்கம். ஒரு ஜனநாயக அரசாங்கத்தைத்தெரிவு செய்யவேண்டியது உண்மையானபிரஜைகளின் கடமை" என்று செல்வி வில்லிஸ் கூறினர்.

இந்த நாட்டின் பாரம்பரியத்தையும், மக்களின் விருந்தோம்பும் பண்பையும் செல்வி வில்லிஸ் பாராட்டினர்.

# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட நீதிபதியின் பாரியார் ஸ்ரீமதி என். சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

சிவஞானவதி இல்லம் 212 புள்ளிகளையும், திலகவதி இல்லம் 206 புள்ளிகளையும, புனிதவதி இல்லம் 204 புள்ளிகளையும், சுபேதவதி இல்லம் 196 புள்ளிகளையும் பெற்றன.

கே. மனேகரி. வி. சுந்தரதேவி, ஆர். சுந்தரவல்லி, ஆகியோர் முறையே மேல், மத்திய, கீழ்ப்பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஸ்ரீமதி சிவஞான சுந்தரம் வெற்றி பெற்ற மாணவிகட்கு பரிசுகளை வழங்கினர்.

# சட்டவிரோதமான மதுபான தயாரிப்பு

## தடுக்க நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்படும் 'கசிப்பு' மதுபானம் பற்றி பார்லிமெண்டும், பத்திரிகைகளும் இன்று மிகுந்த கவனம் செலுத்திவருகின்றன." இவ்வாறு கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார இலாகாவின் அறிக்கையொன்று கூறுகிறது

'கசிப்பு' விற்பனை பற்றி பல பிரமுகர்களும் பிரதிநிதித்துவம் வாய்ந்த சங்கங்களும் தங்கள் கருத்துக்களை அரசினருக்குத் தெரிவித்துள்ளனர். இவற்றைப் பார்வையிட்டபின் அரசாங்கம் கசிப்பு உற்பத்தியை அடியோடு தடுப்பதெனவும் அதன் உற்பத்திக்குத் தேவைப்படும் உபகரணங்களைப் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில்லையெனவும் தீர்மானித்துள்ளது.

சர்க்கரை, பனங்கட்டி ஆகியவற்றின் இறக்குமதியை ஒரேயடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மதுபானம் தயாரிக்க உதவும் புளிப்புச் சத்தின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சட்ட விரோதமாகத் தயாராக்கும் மதுபானத்தை மக்கள் அருந்துவதைக் குறைப்பதற்குச் சாராயத்தின் விலையைக் குறைக்க வேண்டும்.

போத்தல் ஒன்று எட்டு ரூபாயாகவிருந்த சாராயம் 1959 ஜூலை மாதத்தில் வரவு செலவுத் திட்டம் அமுலுக்கு வந்ததோடு இரண்டு ரூபாய் உயர்ந்தது. மதுவருந்துவோர் தொகை அதிகமானலும் சாராயத்தின் விலை அதிகரித்தபின் குறைந்த தொகையான சாராயமே செலவாகியுள்ளது. இதனைப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சாராயத்துக்குப் பதிலாகச் சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் மதுபானத்தை மக்கள் அருந்துகின்ருர்கள் என்பதை இப்புள்ளிவிபரங்கள் அறிவுறுத்துகின்றன.

1958—59 வரை சாராயத்தின் விலை போத்தல் ஒன்று எட்டு ரூபாயாக இருந்தது. 1958 ஜூலை தொடக்கம் 1959 ஜூன் வரை ஒருமாதத்திற்கு சராசரி 142,186 கலன் சாராயம் செலவாகியது. 1959—60 வரை சராசரி 115,037 கலனாகக் குறைந்துவிட்டது. இவ்வருடம் முழுவதிலும் 325 781 கலன் சாராயம் குறைவாகவே செலவாகியது.

இப்புள்ளி விபரங்கள் சட்டத்தின்படி விநியோகமாகும் சாராயத்தின் விற்பனை குறைந்திருப்பதையும், சட்டவிரோதமாகத் தயார்செய்யப்படும் 'கசிப்பி'ன் விற்பனை அதிகமாகியிருப்பதையும் காட்டுகின்றன. 'கசிப்பு' மக்களின் தேகசுகத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. சமூக முன்னேற்றத் தாபனங்களுடன் கலந்து ஆலோசித்ததன்பேரில் அரசாங்கம் சாராயத்தின் விலையை போத்தல் ஒன்று பத்து ரூபாயிலிருந்து எட்டு ரூபாயாக்கத் தீர்மானித்துள்ளது. இம்மாதம் 16 ம் திகதியிலிருந்து சாராயத்தின் விலையைப் போத்தல் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் குறைப்பதென அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இவ்வாறு குறைப்பதால் அரசாங்கத்தின் சாராயம் அதிகம் விற்பனையாகும் என்றும் கசிப்பு விற்பனை குறைந்துவிடும் என்றும் அரசாங்கம் எதிர்பார்க்கிறது. சட்டவிரோதமாகக் கசிப்புத் தயாரிப்பதைத் தடுக்கவும் அரசங்ாகம் நடவடிக்கை எடுத்துவருகிறது.


## மோணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM — TRADE MARK 1950

மோணரு அன் ரோஸ் பப்படங்கள்
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் — ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No 18255 — A. M. BUHARI, 99, 4TH CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

### ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.



10,000 மக்கள் புகழ்வது!

டொலர் — டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. — DOLLAR BRAND

## அலுமினியம்

- ★ அழகு
- ★ மாற்று உயர்ந்த அலுமினியம்
- ★ சுத்தம்
- ★ தாய் நாட்டுக் கைத்தொழிலுக்கே பெருமை தருவது
- ★ நவீன முறையில், முற்போக்கான அதிசயமுறையில் செய்யப்படுவது
- ★ உறுதி, உழைப்பு

டொலர் பவுணைப் பார்த்து வாங்கி மகிழுங்கள்!

தயாரிக்குமிடம்:

### அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்,

மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்.


# தோர்னிகிராப்ட் லண்டன் திரும்பினர்

லண்டன், ஜூலை 17

ஐரோப்பிய பொதுச்சந்தையில பிரிட்டன் சேர்வதுபற்றி இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்த நாடுகளின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்ட பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. பீட்டர் தோர்னிகிராப்ட் இன்று லண்டன் திரும்பினர்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில சேர்வதா இல்லையா என்பதை இனித் தீர்மானிக்க வேண்டியது பிரிட்டனின் பொறுப்பு என்று திரு. தோர்னிகிராபட் கூறினர்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில பிரிட்டன் சேர்வது சப்பந்தமாக எல்லாநாடுகளும் குறிப்பிட்ட சில கஷ்டங்களைத்தான் கொண்டிருக்கின்றன என்று அவர் கூறினர்.

ஐரோப்பிய பொதுச்சந்தையில் சேர்வதில்லை யென்று பிரிட்டன் தீர்மானித்தால் காலப்போக்கில் அது பல பிரச்னைகளைக் கிளப்பும் என்று திரு. தோர்னிகிராப்ட் தெரிவித்தார்.

# டுனிஷியாவில் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூலை 17

டுனிஷியாவிலுள்ள கடற்படைத் தளத்திலிருந்து பிரஞ்சுத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்று கோரி டுனிஷியாவின் வீதிகளில் பெருந்தொகையானேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கடற்படைத் தளத்திலிருந்து பிரஞ்சுத் துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்பது சம்பந்த மாகவும் சகாரா உரிமை சம்பந்தமாகவும் டுனிஷியாவின் அதிபர் ஜெனரல் போகிபா இன்று டுனிஷிய சட்டசபையின் கூட்டத்தில் ஒரு அறிக்கை விடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# மேற்கு நாடுகளின் பதில்

## 48 மணி நேரத்துக்குள் அனுப்பப்படும்

லண்டன், ஜூலை 17

பேர்லின்சம்பந்தமாக சோவியத் பிரதமர் குருஷ்சேவ் சமீபத்தில் விடுத்த அறிக்கைக்கு அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் ஆகிய மூன்று மேற்கு வல்லரசுகளும் இன்னும் 48 மணிநேரத்துக்குள் பதிலனுப்பிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று நாடுகளும் கூட்டாக திரு. குருஷேவுக்கு அனுப்பவிருக்கும் இப் பதில்கடிதத்தின் வாசகத்தை 'நேட்டோ' எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபன நாடுகள் அங்கீகரித்துவிட்டன.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 18-7-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 பி. சந்திரசேகரம் - பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 "இருள் சூழ்ந்த இதயம்" —தயாரிப்பு சி. வி. இராசசுந்தரம் 9-45 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள் 7-30 ஆர். சுப்பிரயணியம்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவித பாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 மதுரை ஸ்ரீரங்கம் ஐயங்கார்—பாட்டு, 9-15 'திருடன் மகன்' - நாடகம், 9-30 நாட்டுப் பாடல்கள். 9-50 கவிதை மொழி.

# சோவியத்-இலங்கை பண்டமாற்று வர்த்தகம்

## விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்

கொழும்பு, திங்கள்

பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தமொன்றில் சோவியத் யூனியனுடன் இலங்கை விரைவில் கைச்சாத்திடும்.

வர்த்தக அமைச்சு அதிகாரிகளுடன் பூர்வாங்க பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சோவியத் யூனியன் தூது கோஷ்டியொன்று அடுத்த மாத ஆரம்பத்தில் இலங்கைக் குவிஜயம் செய்யும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் சோவியத் யூனியனிடமிருந்து பெட்ரோலியப் பொருட்கள், பெட்ரோல் தாங்கிகள், மற்றும் இயந்திரங்களை இலங்கை வாங்கும். இதற்குப் பதிலாக இலங்கையிடமிருந்து தேயிலை ரப்பர், தெங்குப் பொருட்களை சோவியத் ரஷ்யா வாங்கும்.

ரஷ்யாவிடமிருந்து வருடத்துக்கு 40,000 தொன் பெட்ரோலியப் பொருட்களை வாங்குவதற்கு இலங்கை ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன ரஷ்யாவுக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பினர். இதன் பின் நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மாஸ்கோ சென்று திரும்பினர்.

## துணுக்காய்ப் பகுதியில் யானைகள் தொந்தரவு

### ஒரு சைக்கிள் நாசம்

சாவகச்சேரி ஜூலை 17

துணுக்காய், கல்விளான், வெள்ளான் குளம், சம்புவில், ஆலங்குளம், உயிலங்குளம் ஆகிய பகுதிகளில் யானைக் கூட்டங்களின் அட்டகாசம் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

சென்ற சனிக்கிழமை பிற்பகல் கல்விழானிலிருந்து கல்விளான் வெள்ளான்குள ரோட்டில் இருக்கும் சம்புவில்லும் நடுத்தர வகுப் குடியேற்றப்பகுதிக்கு ஒருவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார். போகும்போது எதிர்பாராத விதமாக ஒரு யானைக் கூட்டத்தைச் சந்திக்கவேண்டியேற்பட்டது. யானைகளைக் கண்ட அவர் பீதியடைந்து சைக்கிளை விட்டுவிட்டு காட்டுக்குள் ஓடி உயிர் தப்பிக் கொண்டார். மறுநாட்காலை சைக்கிளை எடுக்கப் பலருடன் சென்றுர். சைக்கிள் சின்னபின்னமாக முறித்தெறியப்பட்டுக் கிடந்தது.

## ஓவியங்கள் களவு

செயிண்டுரோபிஸ், பிரெஞ்சுரிவைரா, ஜூலை16

கிட்டத்தட்ட 8லட்சம் பவுண் மதிப்புள்ள 56 ஓவியங்கள் இங்குள்ள ஒரு மியூசியத்திலிருந்து களவாடப்பட்டுள்ளன.

பிரான்ஸில் இதுவரை கலைப் பொருட்கள் திருடப்பட்ட சம்பவங்களில் இதுதான் மிகப் பெரிய களவாகும்.

# 'சமாதானஒப்பந்தத்தினல் மட்டும் பிரச்சினை தீராது'

## மேற்கு ஜேர்மன் அதிபர் கருத்து

பொன், ஜூலை 17

"பேர்லின் சம்பந்தமாக சோவியத்யூனியன்செய்துவரும் எல்லா ஏற்பாடுகளையும் எதிர்நோக்குவதற்கு மேற்குநாடுகளும் தயார்செய்துவருகின்றன" என்று மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் கொன்ராட் அடினேர் தெரிவித்தார்.

பேர்லின்சம்பந்தமாக சோவியத் யூனியனுடன் முக்கியமான பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறுமென்று டாக்டர் அடினேர் கூறினர்.

பேர்லின் சம்பந்தமாக மோசமான மோதல் எதுவும் ஏற்படாமல் தடுக்க மேற்கு ஜேர்மனி முயற்சி செய்துவருகிறதென்று கூறிய டாகடர் அடினேர், "நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். உலகில் சமாதானம் நிலவவேண்டுமென்பதுதான் எமது ஆவல்" என்று தெரிவித்தார்.

"சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதால் மட்டும் பேர்லின் பிரச்னை தீர்ந்துவிடாது. கட்டுப்பாடான படைகுறைப்பின் மூலம் நெருக்கடி தணிந்தபின்னரே பேர்லின் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியும்" என்று டாக்டர் அடினேர் தெரிவித்தார்.

# 'கூட்டறிக்கையில் காஷ்மீர் பற்றி குறிப்பிட்டது முறையற்றது'

## காஷ்மீர்தேசியமுன்னணி தலைவர் அறிக்கை

ஹைதராபாத், ஜூலை 17

"பாக்கிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் சமீபத்தில் வாஷிங்டனில் விடுத்த ஒரு கூட்டறிக்கையில் காஷ்மீர் பற்றிக் குறிப்பிட்டது முறையற்றது" என்று தேசீய காஷ்மீர் முன்னணித் தலைவர் இன்று ஹைதராபாத்தில் விடுத்த ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

காஷ்மீர் மக்களும் பாரதத்தின் முஸ்லிம் மக்களும் அந்தக் கூட்டறிக்கையக் கண்டு வேதனையும் ஆத்திரமும் அடைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

"காஷ்மீர் பாரதத்தின் ஒரு பகுதியென்பதை பத்துவருடங்களுக்கு முன்னரே அரசியல் நிர்ணய சபை மூலம் காஷ்மீர் மக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துவிட்டனர். இங்நிலையில் இல்லாத ஒரு பிரச்சினையை, இருக்கும் ஒரு பிரச்சினையாகக் கூட்டறிக்கையில் குறிப்பிட்டிருப்பது முறையற்றது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நாட்டைச் சிர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் காஷ்மீர் உட்பட பாரதநாட்டின் மக்கள் பார்த்துக் கொண்டு இருக்க மாட்டார்கள்" என்று தேசீயக் காஷ்மீர் முன்னணித் தலைவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# 'மக்கள் சேவையே அரசாங்கத்தின் கொள்கை'

—நிதிமந்திரி

ஹன்வெலா, திங்கள்

'வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடம் நிதியில்லாவிட்டாலும், கிராமங்களில் வாழும் ஏழை மக்களின் நிலைமைகளைச் சீராக்குவதற்கு அது வேண்டிய யாவற்றையும் செய்து வருகிறது'.

இவ்வாறு நிதி மந்திரி திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா டேக்கத்தாணையிலுள்ள பத்மாவதி பிரிவெனவின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது: ஏழை மக்களிடமிருந்து வரி வசூலிப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல, அவர்களுக்கு வேண்டிய சேவை செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்காவின் முன்னேற்றக் கொள்கைகளை அமுல் செய்வதற்கே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை ஏற்றுக்கொண்டது. அரசாங்கத்தைக் கொண்டு நடாத்துவதற்கு மக்களின் உதவி தேவைப்படுகின்றது. மக்கள் மனப்பூர்வமாக ஒத்துழைப்பார்களானல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐந்து வருடங்களல்ல இருபத்தைந்து வருடங்களுக்கும் நாட்டை ஆள முடியும்.

கொலன்னவா எம். பி. திரு. டி. எஸ். சமரசிங்கா தமது பேச்சிற் கூறியதாவது.

"அரசாங்கத்தை வீழ்த்துவதற்காகப் பிரசாரம் செய்யும் எதிர்க் கட்சியின் பேச்சுக்களை நம்பாதீர்கள். கத்தோலிக்கர்களதும் யு. என். பி.யினரதும் எதிர்ப்புக்களுக்கிடையில் கூட அரசாங்கம் தனது தேசியக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. உயர்தரக் கல்வி கற்பதற்கு வாய்ப்பில்லாதிருந்த வறியவர்களும் அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகக் கல்வி பெறலாம்".

## வடமராட்சிக் கல்லூரிகள்

### விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த "கல்லூரிகள் கலந்துகொண்ட வட. ஆங்கில ஆசிரியர் சங்க வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

வட்டாரப் பரிசோதகர் திரு. எம். கேதுசிகாமணி இவ்வைபவத்துக்குத் தலைமை வகித்ததுடன் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியும் கௌரவித்தார்.

விளையாட்டுக்களில் பின்வருவோர் வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**பெண்கள்**

மே. பிரிவு கே. புஷ்பராணி
ம. பிரிவு ப. அனுசூயா
கீ. பிரிவு க. இந்திராணி

**ஆண்கள்:**

மே. பி. கே. இராசலிங்கம்
ம. பி. ஏ. இராசராசன்
கீ. பி. என். நேசராசா,
பா. பி. ஏ. முருகதாசன்

ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் மூன்று புதிய சாதனைகளை உருவாக்கினர். அக்கல்லூரியைச் சேர்ந்த வி. சண்முகலிங்கம், வி. இளம்செனி ஆகியோர் 1961 ஆண்டுக்குரிய மாணவ வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இம் மாதம் 20-ந் தீகதி மகத்தான ஆரம்பம்!

ராணி சினிமா (யாழ்ப்பாணம்)

தினசரி காலை 10 மணிக்கும் பி. ப. 2 மணிக்கும் மாலை 5-15 மணிக்கும்



புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.
கன்னடத்துப் பைங்கிளி சரோஜாதேவி
மற்றும் பலர் திறம்பட நடித்த

திருடாதே!

★ தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதி வெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!

# "கொடுவாக் கத்தியால் வயிற்றில் வெட்டினர்"

## வட்டுக்கோட்டை கொலை வழக்கில் வாலிபர் சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த பி. மு. நடராசா என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, சின்னத்தம்பி இரத்தினசபாபதி மேல் தொடரப்பட்ட வழக்கு, இன்று வடமாகாண அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் வழக்கை நடத்தினர்.

திரு. எஸ். ஆர். விஜயநாதன், திரு. எஸ். விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. எஸ். நாகராஜாவும், திரு. என். சத்தியேந்திராவும் எதிரிதரப்பில் ஆஜரானர்கள்.

இருபது வயது நிரம்பிய எஸ். திருநாவுக்கரசு என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"நான் பள்ளிக்கூடத்தை விட்டு விலகி ஒரு வருஷமாகிறது. காலஞ்சென்ற பி. மு. நடராசாவை எனக்குத் தெரியும். அவர் வீட்டில் நான் வசித்து வந்தேன். அவரே என்னைப் படிப்பித்தார். நடராசா இறந்த பிறகு நான் எனது பெற்ருேர்களுடன் இருந்துவருகிறேன். ஏப்ரல் மாதம் 14 ம் திகதி கொலை செய்யப்பட்டவர் காலமானர்.

காலஞ்சென்ற நடராசா வியாபாரம் செய்துவந்தார். வட்டுக்கோட்டைச் சந்தியில் ஒரு பலசரக்குக் கடையும், தேநீர்க் கடையும் நடத்திவந்தார். வெங்காயச் சங்கத்துக்குத் தலைவராகவும் இருந்தார். காலஞ்சென்றவர் திருமணமாகாதவர். கடையில் சாப்பிட்டு வந்தார்."

சாட்சி தொடர்ந்து கூறியதாவது:-

காலஞ்சென்றவர் ஈ. வை. 4824 'சொமர்செட்' கார் ஒன்றை வைத்திருந்தார். ஏப்ரல் 14 ம் திகதி அவருடைய காரில் யாழ்ப்பாண நகருக்கு வந்தேன். அவர்தான் காரை ஓட்டி வந்தார். லட்சுமணன் என்பவரும் காரில் கூடவந்தார். அவர் இறந்தவருக்கு தூரத்து உறவினர். நானும் இறந்தவருக்குத் தூரத்துச் சொந்தக்காரன். யாழ்ப்பாணத்தில் நாங்கள் ஒன்றும் அருந்தவில்லை. காருக்குள் குடிவகை இருந்ததோ என்னவோ எனக்குத் தெரியாது. மாலை 9-30 மணியளவில் நாங்கள் வட்டுக்கோட்டைக்குத் திரும்பினேம். சாப்பாடு வராதபடியால், கடைக்குச் சாப்பிடச் சென்ருேம். அப்பொழுது இரவு 10 மணியிருக்கும். இறந்தவரும், லட்சுமணனும், நானும் காரில் இருந்தோம். நான் முன் ஆசனத்தில் இருந்தேன். லட்சுமணன் பின் ஆசனத்தில் இருந்தார்.

எதிரி சின்னத்தம்பி இரத்தினசபாபதி ஒரு கொடுவாக் கத்தியைக் காட்டி, 'காரை நிற்பாட்டு' என்று நடுத் தெருவுக்கு வந்தார். காலஞ்சென்றவர் காரை விட்டு இறங்கி, 'என்ன மச்சான்? என்னைக் கொலை செய்யப்போகிருயா?' என்ருர். 'நான் உன்னைக் கொல்லப்போகிறேன்' என்று எதிரி சொன்னர்.

எதிரி, காலஞ்சென்ற நடராசாவைத் தள்ளிவிட்டு, வயிற்றில் கத்தியால் வெட்டினர். காலஞ்சென்ற நடராசா நிலத்தில் விழுந்தார். நான் கரை விட்டு இறங்கி ஓட்டம் பிடித்தேன்."

வழக்கு தொடர்ந்து நடைபெறும்.

## முத்தமிழ்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்படி வழிபாடு, பிரார்த்தனை செய்வார்கள்.

காலை உணவு முடிந்ததும் பாடசாலை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இங்கு பல்கலைக் கழகப் பிரவேச வகுப்புவரை படிப்பதற்கு வசதிகள் உண்டு. விஞ்ஞானம் படிப்பதற்குச் சிறந்த முறையில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

### மாணவர் நிர்வாகம்

அறிவை வளர்ப்பது கலாசாலை; ஆற்றலை வளர்ப்பது குருகுலம். வகுப்புக்கள் ஒழிந்த ஓய்வு நேரம் இல்லப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சமையல் தவிர்ந்த ஏனைய வீட்டுப் பணிகளை மாணவர்கள் தமக்குள்ளே பங்கிட்டுச் செய்துவருகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் நிர்வாகத்துக்குத் தலைமை வகிப்பர். அவர்களே திட்டங்களைவகுத்து நடத்துவர். இங்கு யோகாசனம், சூரிய நமஸ்காரப் பயிற்சிகள் இடம் பெறுகின்றன. தொழிற்சாலை, நெசவு நிலையம், தோட்டச் செய்கை, மரம் நாட்டுதல் முதலியன உடல் உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் அமைந்துள்ளன. நோயாளர் விடுதி நோய்வாய்ப்பட்ட மாணவருக்குச் சௌகரியங்களை அளிப்பதுடன், முதல் உதவி, வைத்திய சிகிச்சை, செவிலித்தாய்ப் பயிற்சி முதலியனவற்றைப் பயில்வதற்கும் உதவுகின்றது. உற்சவங்கள், விழாக்கள், பொதுக் கூட்டங்கள் என்பனவற்றை ஒழுங்கு செய்து நடாத்துவதில் குருகுலத்தாருக்கு நல்ல பயிற்சி உண்டு. பேச்சுத் திறமை, சங்கீதம், நாடகம் போன்ற கலைகளை வளர்ப்பதற்கு மாணவர் மன்றம் உதவுகிறது. விஞ்ஞான ஆய்வுக் கூடமானது விஞ்ஞானப் பொருட்காட்சி, படக்காட்சிகளை ஒழுங்கு செய்கின்றது. இப்பணிகள் யாவும் மாணவர்களைப் பொதுசன சேவைக்குப் பயிற்றும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. 'ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்' என்னுங் கோட்பாட்டுக்கமைய, பலவேறு மதத்தினரும், சாதியினரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போன்று சகோதர பாவனையுடன், இயற்கையோடு தொடர்புடைய இன்பமயமான தூய வாழ்க்கை வாழ்கின்றனர். ஒரு குடும்பமே போல் இக் குருகுலம் இயங்கி வருகிறது.


### காணி விற்பனவு

யாழ்ப்பாணம் கந்தர்மடம் புளியடி வீதி இல. 20-ல் (றெயில் கேற்றடி) உள்ள இரண்டு பரப்பு குடியிருப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. தேவையானேர் காணிச் சொந்தக்காரருடன் தொடர்பு கொள்ளவும்.

வி. செல்வத்துரை,
20, புளியடி வீதி,
கந்தர்மடம்.


ஆயுதக் குறைப்பு

## அமெரிக்கா-ரஷ்யா ஆலோசனை

மாஸ்கோ, ஜுலை 17

ஆயுதப் படைக்குறைப்பை எந்த விதத்தில் மேற்கொள்ளலாம் என்பதுபற்றி ஆராய அமெரிக்க-சோவியத் பிரதிநிதிகள் இன்று மாஸ்கோவில் கூடுகின்ருர்கள்.

## இசைக் கலைஞர்களுக்கு வரிவிலக்கு வேண்டும்

### யாழ்ப்பாண இசையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கையில் வசிக்கும் இந்திய இசைக் கலைஞர்களுக்கு இன்று விதிக்கப்பட்டிருக்கும் வரியில் விதிவிலக்கு அளிக்கும்படி நிதிமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணம் இசையாளர் அபிவிருத்தி ஐக்கிய சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வண்ணர்பண்ணை மாரியம்மன் கோவிலில் திரு. டி. இரத்தினகோபால் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலைஞர்களின் நல்வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் அருஞ்சேவை செய்த முன்னள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் சேவைக்கு நன்றி தெரிவித்து காரியதரிசி பேசினர்.

இக் கூட்டத்தில் இசையாளரின் புராதன மடமாகிய மாவை மடாலயத்தை அங்கத்தவர்களிடத்தில் நிதியுதவி பெற்றுப் புனருத்தருணம் செய்வதென்றும் கூடிய விரைவில் மடத்துடன் இணைத்து ஒரு இசைப் பாடசாலை நிறுவுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மரணசகாயநிதி, சேமலாபநிதி ஆகிய உதவிகளை இசையாளர்களுக்குப் புதிய திட்டத்துடன் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 'அமர்ஜோன்' என்ற சட்டவிரோத மது தயாரிப்பு நிலையத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்

இரத்தினபுரி, திங்கள்

சட்டவிரோதமாக 'அமர்ஜோன்' என்ற பெயரில் குடிவகையைத் தயாரிக்கும் வீட்டினரைப் பிடிப்பதற்காக இரண்டு வருடங்களாகப் பொலிஸார் தேடிக் கொண்டிருந்தனர்.

முதலாளி ஒருவரின் வீட்டுக்கருகில் இதற்கான அடையாளங்களை இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியம் உட்பட ஒரு பொலிஸ் கோஷ்டியினர் கண்டனர். 25 அடி நீளமுள்ள குழாய் நிலத்துக்கு அடியில் அமைக்கப் பெற்று அதன் ஒரு முனை ஒரு பெரிய பீப்பாவில் பொருத்தப்பட்டிருந்தது. 120 போத்தல் கொண்ட அத்தனை அமர்ஜோனையும் பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகத்தின் பேரில் சைமன் பெரேரா என்பவர் இரத்தினபுரி நீதிபதி முன் கொண்டுவரப்பட்டார். நீதிபதி இவரைப் பிணையில் விடுதலை செய்தார்.

## விதை வெங்காய பெர்மீட்டில் வியாபாரம்?

### கட்டுப்படுத்த கூட்டுறவு சமாஜம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண வெங்காயம் ஆணையிறவுத் தடையைத் தாண்டி தனிப்பட்ட வியாபாரிகள் மூலம் வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதாகத் தெரிகிறது. இதற்கு வவனியாவிலுள்ள கமக்காரர்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து விதை வெங்காயம் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் பெர்மிட்டுகள் உதவியளிப்பதாகத் தெரிகிறது. இப் பெர்மிட்டுகள் தனிப்பட்ட வியாபாரிகளிடம் கைமாறப்பட்டு புதிய வெங்காயமே வெளியிடத்துக்கு எடுத்துச்செல்ல உதவுகிறதாகத் தெரிகிறது.

தனிப்பட்டவியாபாரிகளினல் ஆணையிறவுக்கப்பால் வெங்காயம் கொண்டு செல்வதைத் தடை செய்யுமாறு வடபகுதி விளைபொருள் விருத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாஜம் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்குக் கடிதமெழுதியிருப்பதாகத் தெரிகிறது.


மகத்தான 2 -வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா வெம்பிலி
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)

நவா மொடர்ன் விஜிதா
(கொம்பனித்தெரு) (பதுளை) (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனேரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்

ஜெமினி கணேசன் - அஞ்சலிதேவி
நடித்த
கணவனே கண்கண்ட தெய்வம்

மனேஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 மணிக்கும் மாலை 5-45 மணிக்கும்
தங்கவேலு — பி. கே. சரஸ்வதி
நடித்த
மேதாவிகள்

தினசரி பி. ப. 2 மணிக்கும் 3-45 மணிக்கும்
வைல்ட் ஸ்ட்ரோபறிஸ்
(ஆங்கிலம்)
WILD STRAWBERRIES


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது